

ஆண்டறிக்கை
2020

தேசிய தொழில்சார் பாதுகாப்பு
மற்றும் சுகாதார நிறுவகம்

வருடாந்த அறிக்கை - 2020

தொகுப்பு:

சம்பிக்க அமரசிங்க, மொகான் பெரேரா, சன்துலி சுமனதேவா

வடிவமைப்பு - துசித்தா பெரேரா

வெளியீடு:

தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தேசிய நிறுவகத்தின் வெளியீட்டுக் குழு

தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தேசிய நிறுவகம்
இல. 97, ஜாவத்தை வீதி, கொழும்பு 05, இலங்கை
தொலைபேசி: + 94 11 2 585 425

அனைத்துப் பதிப்புரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளது
2021

ISBN 978-624-6017-02-6



தேசிய தொழில்சார் பாதுகாப்புமற்றும் சுகாதார நிறுவகப் பணிப்பாளர் அதிபதியின் செய்தி

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டிருந்ததுடன், 2011ஆம் ஆண்டில் அதன் செயற்பாட்டினை ஆரம்பித்திருந்தது.

இந்நிறுவகத்தின் இலக்கு, சுய நிதியிடல் அமைப்பொன்றாக இருக்கையில் தொழிற்றுறைக்கு உலகதரத்திலான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவையொன்றினை வழங்குவதாகும். தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் எமது அனைத்து பங்குதாரர்களுக்கும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார தகவலை வழங்குவதில் முன்னணியில் இருக்கின்றது.

தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது அது ஆரம்பிக்கப்பட்டு கடந்த சில ஆண்டுகளுக்குள் கருத்தரங்குகளை, பயிற்சியமர்வுகளை ஒழுங்கமைத்தல் மற்றும் பாதுகாப்பு அலுவலர்களைத் தகுதியுள்ளவர்களாக்குதல் போன்ற அத்தகைய பல்வேறு செயற்பாடுகளை ஆற்றுவதனூடாக தொழிற்றுறையினரிடையேயும், பொதுமக்களுக்கிடையிலும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வினை உருவாக்க முடிந்திருந்தது.

தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, அது 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இலங்கையரின் தொழிலாற்றுகின்ற சூழலில் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக அவர்களின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் அறிவினையும், திறன்களையும் பகிர்ந்துகொள்வதற்கும், நாளதுவரைப்படுத்துவதற்கும் இலங்கையில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தொழில்சார் நிபுணர்களுக்கான முதல் அடித்தளமாக சேவையாற்றியுள்ளது. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், அனைவருக்கும் பாதுகாப்பான, சுகாதாரமான வேலைத்தலம் என்பதனை அடைவதற்குரிய பொதுவான அபிலாசையை நோக்கிய ஒழுங்கமைப்பாளர்கள், செய்முறையாளர்கள், நிபுணர்கள், அராய்ச்சியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களை ஒன்றாகக் கொண்டுவருகின்றது.

தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, விழிப்புணர்வினை அதிகரிப்பதனூடாகவும், உரிய சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கையையும் பின்பற்றுவதனூடாக அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பாக தொழில்புரிகின்ற வேலைச் சூழலை சீர்ப்படுத்தி, பேணி, நிரந்தரமானதாக்குவதற்கு தன்னை அர்ப்பணிக்கின்றது. தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, எமது அனைத்து அக்கறைதாரர்களுக்கும் எப்போதும் மதிப்பளிப்பதுடன், தொழிற்றுறையின் தேவைப்பாடுகளின் அடிப்படையில் பாகுபாடற்ற, தொழில்நுணுக்க சேவைகளை வழங்குவதற்கும் உறுதிபூண்டுள்ளது. தொழில்நுணுக்கப் பயிற்சியை வழங்குவதில், விழிப்புணர்வினை உருவாக்குவதில், வியாபாரத்தை தொழிற்படுத்துகின்றவர்களின் நியதிகளின்படி உயர் மட்டத்திலான தொழில்சார் சுகாதார நலன் மற்றும் பாதுகாப்பான செய்முறைகள், தொழில்சார் நோய்களை மற்றும் தொழில்சார் விபத்துக்களைத் தடுத்தல் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார விளைவுகள் மீதானதாக்கம், மாணவர்களுக்குத் தேவையான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பயிற்சிக்கான ஏற்பாடு, தொழில் புரிவதற்கான உடற்றகுதி சேவைகளை வழங்குதல் மற்றும்

சுற்றுப்புறச் சூழலைக் கண்காணிக்கின்ற சேவைகளை வழங்குதல் போன்றவற்றில் நாம் முன்னோடிகளாகத் திகழ்கின்றோம்.

எமது நிறுவகத்தினால் அளிக்கப்படுகின்ற பயிற்சிகள், வேலைத் தலங்களில் ஏனையவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துகின்ற அதேவேளையில் தொழில் புரிகையில் வேலையாளர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும். தமது வேலைத்தலங்களில் இருக்கின்ற குறிப்பிட்ட தீங்குகளை இனங்காண்பதற்கு தனிப்பட்டவர்களையும் இயலச் செய்கின்றது.

நாம், எமது சேவைகளை வழங்குவதற்கு சிறந்த விஞ்ஞானம்சார் செய்முறைகளை, சிறந்த விஞ்ஞான அறிவினையும் வளங்களையும் மட்டுமே பயன்படுத்துகின்றோம். எமது சேவைகளை வழங்குவதற்கு அனுபவம் வாய்ந்த சிறந்தத கைமையுள்ள நிபுணர்களைப் பணிக்கமர்த்துவதன் மூலம் எமது சேவைகளின் சிறந்த தரத்தை நாம் பேணுகின்றோம். நாம், இலங்கையரின் எதிர்கால தொழிற்றுறையினை நோக்கி சிறந்த தரமான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவைகளை நாம் வழங்குகின்றோம்.

உள்நாட்டுத் தொழிற்றுறை, தொழில்தருநர்கள், பணியாளர்கள், சர்வதேச தொழில் தாபனங்கள், பல்கலைக்கழங்கள் மற்றும் உலக எண்ணக்கருத்துக்களுக்கமைவான தொழில்சார் சமூகத்துடன் பங்குடமையை ஏற்படுத்துவதில் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சினைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற ஒரேயொரு அரசாங்க நிறுவகம் நாமாவோம். மேலும், நாம் தொழில்தருநர்கள், பணியாளர்கள் மற்றும் அனைத்துப் பங்குதாரர்களுடனும் பணிபுரிவதுடன், **அனைத்து முத்தரப்பு ஆக்கக்கூறுகளுடன்** தொடர்பினைப் பேணுவதற்காக எம்மை அர்ப்பணித்துள்ளோம்.

டாக்டர். என். சி. என். அமரதுங்க

பணிப்பாளர் அதிபதி

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம

தேசியதொழில்சார் பாதுகாப்புமற்றும் சுகாதாரநிறுவகம் - பணிப்பாளர் சபை

பெயர்	பதவி	குழுவில் வகிக்கும் பதவி
திரு.என்.பீ.டீ.யூ. கே.மாப்பாபத்திரண	செயலாளர் - தொழில் அமைச்சு	தலைவர்
டாக்டர்.என்.சீ.அமரசிங்க	பணிப்பாளர் நாயகம்	குழு உறுப்பினர்
திரு.பிரபாத் சந்திரகீர்த்தி	ஆணையாளர் நாயகம்	குழு உறுப்பினர்
திரு.கே.ஏ.பீ.குறுப்பு	பிரதானகணக்காளர்	குழு உறுப்பினர்
டாக்டர்.இனோக்காசுரவீர	சமுதாயமருத்துவஆலோசகர்	குழு உறுப்பினர்
திரு.இந்திக்ககமகே	பிரதானமுகாமையாளர் - குழு மனித வளம் மற்றும் நிர்வாகம்	குழு உறுப்பினர்
திரு.வஜிரஎல்லேபொல	பிரதிப் பணிப்பாளர் நாயகம்	குழு உறுப்பினர்
திரு.சதுரமொஹொட்டிகே	சிரேஸ்ட உதவிச் செயலாளர்	குழு உறுப்பினர்
திரு.அபேசிறிவர்தன	பிரதானகைத்தொழிற்சாலைஆய்வுப் பொறியியலாளர் - தொழில்துறைபாதுகாப்பு	குழு உறுப்பினர்
திருமதி.எச்.ஆர்.ஜே. கே.எரபதுபிட்டிய	தாதிஉத்தியோகத்தர்	குழு உறுப்பினர்
டாக்டர்.ரவீந்திரஉடுகம	மருத்துவர்	குழு உறுப்பினர்
டாக்டர்.பாலித்த ராஜபக்ஷ	மருத்துவர்	குழு உறுப்பினர்
டாக்டர்.திலக் பிரனாந்து	ஓய்வுநிலைமருத்துவர்	குழு உறுப்பினர்
டாக்டர்.புபுது சுமனசேக்கர	நிறைவேற்றுப் பணிப்பாளர்	குழு உறுப்பினர்

பொருளடக்கம்

பணிப்பாளர் அதிபதியின் செய்தி	1 - 6
பொருளடக்கம்	2 - 3
அட்டவணைகளின் பட்டியல்	4 - 5
அத்தியாயம் 1 - தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்	6
1.1 அறிமுகம்	
1.2 தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள	
1.3 விசேட முன்னுரிமைகள்	
1.4 நிறுவகப் பணியாளரின் பதவிநிலைக் கட்டமைப்பு	
அத்தியாயம் 2 - நிறுவகத்தின் சேவைகள்	9
2.1 சேவை ஏற்பாடு	9
2.1.1 வழமையான செயற்பாடுகள்	9
அ. சூழல்சார் கண்காணிப்புகள்	10 - 12
ஆ. தொ.பா.சு இடர்களைமதிப்பிடுதல	13
இ. வேலைக்குப் பொருத்தமான தன்மை பற்றிய மதிப்பீடுகள	13
2.1.2 விசேட செயற்பாடுகள	12
அ. விசேடபயிற்சிகள	13
இ. தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார திறமை விருதுகள் போட்டியும் வைபவமும்	13
ஈ. தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடு	13
உ. தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துடன் தொடர்புபட்டஆய்வுச் செயற்பாடுகள	13
ஊ. தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார தொழில் வல்லுநர் ஒன்றியம்	13
எ. CSR செயற்பாடுகள	14

2.1.3. சர்வதேச கூட்டிணைவுகள	13
2.2 சேவைத் தரத்தின் செம்மைப் படுத்தல்கள	13
2.2.1 சேவைத் தரத்தைச் சான்றுப்படுத்தும் முறைமைகள்	14
2.2.2. நிறுவனம்சார் உட்கட்டமைப்பு விருத்திகள்	14
அத்தியாயம் 3 - நிறுவனம்சார் முன்னேற்றங்கள	14 - 26
அத்தியாயம் 4 - விசேட சாதனைகள்	27 - 28
அத்தியாயம் 5 - சவால்கள	29 - 54

உருவங்களின் பட்டியல்

உருவம 1.4 பணியாளர்களின் பதவிநிலைக் கட்டமைப்பு	6
உருவம் 3.1 வழக்கமான செயற்பாடுகள்	16
உருவம் 3.2 டிப்ளோமாதாரிகளின் முன்னேற்றம் 2012-2019	18
உருவம் 3.3 சான்றிதழ் பெற்றுக்கொண்டோரின் முன்னேற்றம் 2012-2019	18

முதலாவது அத்தியாயம்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

1.1 அறிமுகம்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, நாட்டில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார ஆசாரத்தை விருத்திசெய்கின்ற குறிக்கோளுடன், தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சில் கொள்கையை உருவாக்குகின்ற நிறுவனமாக 2005 ஏப்பிரல் மாதத்தில் தாபிக்கப்பட்டிருந்தது. இந்நிறுவகத்தின் பொறுப்பாணை, நாட்டில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் விழிப்புணர்வினை உருவாக்குதல், பயிற்சியளித்தல் மற்றும் அதன் மீதான ஆய்வுகளை மேற்கொள்வதாகும். தற்போது, தொழில்சார் அமைப்பொன்றாக இயங்கி வேலைத்தல சுகாதாரம் மற்றும் பாதுகாப்பின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணித்துள்ளது. தகவல் வழங்குதல், பயிற்சியளித்தல், கல்வி ஆராய்ச்சி, ஆய்வுகள், தீர்வுகள் மற்றும் வேலையாற்றுகின்ற சூழல்களில் வளமான பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை உறுதிப்படுத்துகின்ற முகாமைத்துவ முறைமைகள் என்பவற்றினூடாக இலங்கையில் தொழிலாளர் வர்க்கத்தின் மொத்த பௌதீக, உள மற்றும் சமூக நலநன மேம்படுத்துவதற்கான தேவையை அடிப்படையாகக் கொண்டு நிறுவப்பட்டுள்ளது.

இலங்கையின் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் கீழ் 2009 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட நியதிச்சட்ட அதிகாரங்களைக் கொண்டுள்ள தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, இடர்களை மதிப்பிடுவதில் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்கு பணியாளர்கள் மற்றும் தொழில்தருநர்களுக்கு வலுவளிப்பதுடன், அவர்களது பணியாளர்களதும், ஏதேனும் தாபனங்களில் இருக்கின்ற அக்கறைதாரர்களது சுகாதாரப் பாதுகாப்பையும், சேமநலனையும் செம்மைப்படுத்துவதில் உலக தரத்திலான தீர்வுகளையும் நடைமுறைப்படுத்துகின்றது.

எந்தவொரு நாட்டினதும் நிலையான பொருளாதார அபிவிருத்தியைக் கட்டியெழுப்புகின்ற சக்தி ஆரோக்கியமான தொழிலணியே என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அத்துடன், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, இலங்கை முழுவதும் பாதுகாப்பான ஆசாரமொன்றை உருவாக்கி, பாதுகாப்பாக, ஆரோக்கியமாக வேலையாற்றும் சூழலிலிருந்து பணியாற்றுவதற்கு தனிப்பட்டவர்களது அடிப்படை மனித உரிமைகளை மேம்படுத்துவதுடன், தொழிலுடன் தொடர்புபட்ட நோய்களையும் தடுக்கின்றது.

வேலை வாழ்க்கையின் சமநிலையை அனைத்துப் பணியாளர்களும் பேணுவது மிகவும் முக்கியமானதாகும். ஆனால் வேலை அழுத்தம் ஒருவரின் வாழ்க்கையிலும் ஒட்டுமொத்தச் சமூகத்திற்கும் பாதகமான விளைவினத் தருகின்றது. பணியாளர்களிடையே சிறந்த வேலை நிபந்தனைகளின்மை, சிறந்த செய்முறைகளின்மை, பாதுகாப்பற்ற பழக்க வழக்கங்கள் மற்றும் பாதுகாப்பற்ற செயல்கள் காரணமாக வேலையுடன் தொடர்புபட்ட விபத்துக்கள் மற்றும் நோய்கள் அதிகரிக்கின்றன. இந்தக் காரணிகள், 8.7 மில்லியன் இலங்கை தொழிலணிக்கிடையில் உயர்மட்டத்திலான வருகையின்மையையும் புரள்வு வீதத்தையும் விளைவாக்குகின்றது.

இந்நிறுவகமானது, உரிய சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் தலைப்புகள் பற்றி தாபனங்கள் மற்றும் அக்கறைதாரர்களுக்கிடையே நீடித்த கலந்துரையாடலை ஊக்குவித்து, ஆதரவளிக்கின்றது. தொழில் சார்ஊறுகள் காரணமான பொருளாதார செலவீட்டினை கட்டுப்படுத்திக் குறைத்தல், வேலைத் தலங்களில் உற்பத்தித் திறனைச் செம்மைப்படுத்துதல், ஆரோக்கியமான, ஊக்குவிக்கப்பட்ட தொழில் அணியொன்றை உருவாக்குதல் போன்றவற்றிற்காக தனிப்பட்டவரின் பொறுப்பினை ஊக்குவிக்கின்றது.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சவால்களைத் தெரிவிக்கின்ற தாபனங்களுக்கு உதவுகின்ற தகவல்கள், கருவிகள் மற்றும் வளங்களுடன் கூடிய ஆற்றல்களை வழங்கு தொழிற்றுறை

நிபுணர்களினால் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் அதிகளவில் கவனஞ் செலுத்தி வழங்குகின்றது. இந்த முயற்சிகள், தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தொடர்புகளையும், வலையமைப்பையும் நிறுவுவதற்கும், இந்தவிடயம் தொடர்பில் மேலும் ஆய்வுகளையும், ஆராய்ச்சிகளையும் மேற்கொள்வதற்கும் ஏனைய தாபனங்களுடன் இணைவதன் மூலம் நிறைவுசெய்கின்றது.

இந்நிறுவகமானது, மருத்துவ பரிசோதனைகள், பாதுகாப்பு மற்றும் சுகாதார இடர் மதிப்பீட்டாய்வுடன் இணங்கி சூழல் கண்காணிப்பும் பயிற்சியும் மற்றும் பாரிய பிராந்திய அளவீடு, மன்றங்கள்இ மாநாடுகள் மற்றும் வலையமைப்பு நிகழ்வுகள் அத்துடன் ஆரோக்கியமானதும் அதிக பொருத்தமானதுமான வேலை செய்முறைகள் போன்றவற்றிற்கு உதவுகின்றது.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, பாகுபாடற்ற உலகதரத்திலான தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவையை எப்போதும் வழங்குகின்றதொரு நிறுவகம் என்பதுடன், தொழில்சார் விபத்துக்கள் மற்றும் நோய்களைக் குறைக்கும் நோக்கத்துடன் பாதுகாப்பான, சுகாதாரமான வேலைச் சூழலை உருவாக்குவதுடன், சுய நிதியிடல் நிறுவகமொன்றாக நிறுவி நிலையாக இருப்பதற்கு கவனஞ் செலுத்துகின்றது.

மிகவும் வெற்றிகரமான முறையில் மேலுள்ள செயற்பாடுகளை ஆற்றுவதன் மூலம் வாடிக்கையாளர்களின் உச்சதிருப்திக்காக அவர்களுக்கு ஆக்கத்திறன்சார் சேவையை வழங்க முடிந்துள்ளதென்பதை தெரிவிப்பதில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றுகின்ற அதி உயர் இலக்கு குறுகிய காலப்பகுதியில் அடையப்பட்டுள்ளமை பாரிய வெற்றியென்பதையிட்டு நாம் பெருமைப்பட முடியும். தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் சேவைகளை நிலையாக பல நிறுவனங்கள் பெற்றுள்ளன என்ற இந்த உண்மையை பின் தொடர்ந்து செய்யப்படுகின்ற ஆய்வு நிரூபிக்கின்றது.

அண்மை கடந்த காலங்களில், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, உரிய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன், அவற்றின் பணியாளர்களின் சுகாதாரத் தற்காப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கு பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களையும், நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தது. இந்த ஆண்டுகாலப்பகுதியில், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கும், பல தொழிற்றுறைகளுக்கிடையில் தொழில்சார் விபத்துக்களையும், நோய்களையும் குறைப்பதற்குப் பங்களிப்புச் செய்துள்ளது.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, அனைத்து சுதந்திர வர்த்தக வலைய தொழிற்றுறைகளுக்கிடையிலும் அதேபோன்று உற்பத்தித் துறை, புடைவை மற்றும் ஆடை உற்பத்தித் துறை, விவசாயத்துறை போன்ற அத்தகைய அனைத்து தொழிற்றுறைகளிலும் பணியாளர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைச் செம்மைப்படுத்துவதில் அவர்களது தேவைகளின் அடிப்படையில் மிகவும் வெற்றிகரமான சேவையை வழங்கி “தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் முத்திரையைப்” பதிக்க முடிந்திருந்தது.

1.2 தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள

தொலைநோக்கு

'அனைவருக்கும் தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலனோம்பலை வழங்குதல்'.

செயற்பணி

'வேலைத்தலத்தின் பாதுகாப்பினையும் சுகாதாரத்தையும் உறுதிப்படுத்தும் மற்றும் உற்பத்தித்திறனை செம்மைப்படுத்தும் பொருட்டு அனைத்து வகையான தொழில் வாய்ப்புத் தடைகளையும் தடுப்பதற்குரிய கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி என்பவற்றினூடாக முத்தரப்பு அக்கறைதாரர்களையும் வலுப்படுத்துதல்'.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் குறிக்கோள்கள்

பொதுவான குறிக்கோள்கள்

அ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றி அத்துடன் தொழில்தருநர்களினதும் பணியாளர்களினதும் தொழில் மற்றும் பாதுகாப்பின் தன்மையைக் கவனத்திலெடுத்து, இருவரும் வேலையாற்றுகின்ற சூழல் பற்ற தேசிய கொள்கையை வகுத்தமைப்பதில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்

(ஆ) வேலைத் தலங்களில் தொழில் தொடர்பான விபத்துக்கள் மற்றும் ஊறுகளைத் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் பற்றி அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்

(இ தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறையில் விசாரணைகள், ஆய்வு நிகழ்ச்சித்திட்டங்கள், அளவீடுகள் மற்றும் ஆராய்ச்சி போன்றவற்றை நடத்துதல், பெறுப்பேற்றல் மற்றும் அவற்றிற்கு உதவுதல்

(ஈ) உபகரணத்தை சரியாகப் பயன்படுத்துவது, தீங்கிளைக்கின்ற பொருட்கள், பௌதீக, இரசாயன அல்லது உயிரியல் முகவர்கள் அல்லது உற்பத்திப் பொருட்கள் அல்லது பிறவேறு தீங்குகள் பற்றி எந்த நிறுவனத்திற்கோ அல்லது ஆளுக்கோ ஆலோசனை சேவையை வழங்குதல்

(உ) தொழில்சார் உறவுகள் மற்றும் சுகாதாரத்தில் அத்துடன் தொடர்புபட்ட விடயங்களில் அறிவினை, பயிற்சியினைத் தேவைப்படுத்துகின்ற பணியாளர்கள், இருப்பாளர்கள், வேலையாளர்கள் அல்லது பிறவேறு நபர்களுக்கு அறிவூட்டுதல் மற்றும் தேவையான பயிற்சியை பிறவேறு நிறுவனங்களுடன் அல்லது இலங்கை அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து அல்லது நிறுவகத்தினால் வழங்குதல் மற்றும் அத்தகைய கல்வி அல்லது பயிற்சியினைப் பூர்த்திசெய்வதன் பேரில் சான்றிதழ்கள் மற்றும் டிப்புளோமாக்களை வழங்குதல்

(ஊ) உபகரணத்தை சரியாகப் பயன்படுத்துவது, தீங்கிளைக்கின்ற பொருட்கள், பௌதீக, இரசாயன அல்லது உயிரியல் முகவர்கள் அல்லது உற்பத்திப் பொருட்கள் மற்றும் தீங்குகளாகத் தெரிந்தவற்றை தவிர்த்தல் பற்றிய தேவையான சேவைகளை வழங்குதல்

((எ) (i) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான விடயங்களில் நியமங்கள், நியதிகள், செய்முறைகள் மற்றும் வழிகாட்டல்கள் தொடர்பான சட்டவாக்கத் தேவைப்பாடுகள் பற்றி அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்

(ii) வேலைச் செயன்முறை, பொருட்கள் மற்றும் முகவர்களை மதிப்பிடுதல் மற்றும் தீர்மானித்தல். மேற்பார்வைக்கமைவாக தடைசெய்யப்பட்டவை, மட்டுப்படுத்தப்பட்டவை அல்லது ஆக்கப்பட்டவையை வெளிப்படுத்தல்

(ஏ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தகவல்களை சேகரித்தல், தயாரித்தல், பரப்புதல் மற்றும் வெளியிடுதலை பொறுப்பேற்றல் அல்லதுஒருங்கிசைதல்

(i) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான மாநாடுகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் அல்லது ஏனைய ஒத்த நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்தல் அல்லது அனுசரணையளித்தல் மற்றும் பத்திரிகைகளில் வெளியிடுதல்

(ஐ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துடன் தொடர்புபட்ட அமைச்சுக்களுக்கிடையிலான கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்

(ஒ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார செய்முறையினை மேம்படுத்தும் நோக்கத்திற்காக நூலகங்கள் மற்றும் ஆய்வுகூடங்களைத் தாபித்தல் மற்றும் பராமரித்தல்

(ஓ) ஆராய்ச்சி மற்றும் விசேட ஆய்வுகூடங்களை விருத்தி செய்தல்

(ஔ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார துறையிலிருக்கின்ற தேசிய, சர்வதேச நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் அல்லது பிறவேறு தாபனங்களுடன் இணைப்புகளை, வலையமைப்பினைத் தாபித்தல்

(ஃ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறையில் தேசிய நியமங்களை உருவாக்குதல்.

1.3 விசேடமுன்னுரிமைகள்

- நாட்டில் காலத்துடன் கூடிய தேவைகள் மற்றும் சவால்களை கவனத்தில் கொண்டு 2009 ஆம் அண்டின் 38 ஆம் இலக்க சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களின் அடிப்படையில் பாதுகாப்பு கலாசாரமொன்றை உருவாக்குதல்.
- பணியாளர்களுக்கு பாதுகாப்பான, சுகாதாரமான வேலைத்தலமொன்றுக்கான ஏற்பாடு.
- அதிகளவு நாளதுவரைப்படுத்தப்பட்ட அறிவினைப் பகிர்வது பற்றிய பயிற்சி மற்றும் விழிப்புணர்வினை உருவாக்குவதனூடாக பாதுகாப்பு அலுவலர்களுக்கிடையே தொழில்நுட்ப தகைமைகளை விருத்தி செய்தலும் செம்மைப்படுத்துதலும்.
- தொழிற்றுறையில் காணப்படுகின்ற தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சவால்களுக்கான தீர்வுகளைக் காணுதல்.

1.4 பணியாளர்களின் பதவிநிலைக் கட்டமைப்பு

சிரேஷ்ட முகாமைத்துவம்		மத்திய தர முகாமையாளர்கள		சிரேஷ்ட முகாமையாளர்கள்		ஆரம்ப மட்டம்		மொத்தம்		
அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை	இடுப்பவர்களின் எண்ணிக்கை	அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை	இடுப்பவர்களின் எண்ணிக்கை	அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை	இடுப்பவர்களின் எண்ணிக்கை	அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை	இடுப்பவர்களின் எண்ணிக்கை	அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை	இடுப்பவர்களின் எண்ணிக்கை	வெற்றிடங் களின் எண்ணிக்கை வீதம்
07	02	03	03	10	06	05	05	25	16	36%

இரண்டாம் அத்தியாயம்

நிறுவனத்தின் சேவை ஏற்பாடு

நிறுவகத்தின் செயற்பாடுகள்

இந்த நிறுவகமானது, நாட்டில் பாதுகாப்பு கலாசாரத்தை மேம்படுத்தும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்புபட்ட பயிற்சி, ஆய்வு மற்றும் விழிப்புணர்வினை மேற்கொள்வதற்கான பொறுப்பாணையைக் கொண்டிருக்கின்றது. இதன்படி, கீழே காட்டப்பட்டுள்ளவாறு இரண்டு பரந்தவகையிலான செயற்பாடுகள் நிறுவகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

2.1 சேவை ஏற்பாடு

அனைத்து தொழில்தருநர்கள், பணியாளர்கள் மற்றும் நாட்டிலுள்ள அனைத்து தொழில்சார் குழுமங்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதும், பயிற்சியையும் மற்றும் ஆய்வினையும் மேற்கொள்வதும் நிறுவகத்தின் பொறுப்பாணையாகும். இதன்படி, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது அதனது வழமையான செயற்பாடுகள் மற்றும் குறிப்பிட்ட செயற்பாடுகள், சர்வதேச மற்றும் தேசிய ஒருங்கிணைவினூடாக தரமான, பாகுபாடற்ற சேவைகளை வழங்கிவருகின்றது.

2.1.1 வழமையான செயற்பாடுகள்

பின்வரும் செயற்பாடுகள் எமது வழமையான செயற்பாடுகளாகக் கருதப்படுகின்றன.

அ. சூழலியல் கண்காணிப்பு

ஆ. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார இடர் மதிப்பீடுகள்

இ. தொழில் புரிவதற்கான உடற்றகுதியை மதிப்பிடுதல்

அ. சூழலியல் கண்காணிப்பு

- இச்செயற்பாட்டின் குறிக்கோள், வேலைச் சூழல் நிலைமைகளின் தரங்களை உறுதிப்படுத்தும் வகையில் அதனை அளவிடுதலும் கண்காணித்தலும், அத்துடன், வேலையாளர்களுக்கு சுமூகமான, சுகாதாரமான வேலைத் தலத்தினை வழங்குதலுமாகும். பணிபுரியும் சூழல்சார் கண்காணிப்பானது, சத்தம், வெப்பம், வேலைத்தல வெளிச்சமட்டங்களிலுள்ள இரசாயனக் கூறுகள் மற்றும் விசேட தகைமையுள்ள அலுவலர்களால் அதி நவீன உபகரணங்களைப் பயன்படுத்துகின்ற இடங்களில் 'புளு' வாயு மட்டங்கள் போன்ற அத்தகைய தொழில்நுணுக்க அளவீடுகளைப் பெறுவதன் மூலம் நடத்தப்படுகின்றது. பெற்றுக்கொள்ளப்பட்ட விளைவுகளின்படி, பணிபுரியும் சூழல்சார் செம்மைப்படுத்தல்கள் எடுத்தியம்பப்படுதல் வேண்டும் என்பதுடன், பரிந்துரைகளும் வழங்கப்பட வேண்டியிருக்கின்றன. பின்வரும் வசதிகள் சூழல்சார் கண்காணிப்புகளாக காணப்படுகின்றன.-உள்ளகக் காற்றின் தரத்திற்கானஅளவீட்டினைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் புளு வாயுபகுப்பாய்வினைப் பயன்படுத்திபுகை வெளியீட்டினைப் பரிசோதித்தல்.
- உள்ளகக் காற்றின் தரத்திற்கான அளவீட்டினைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் வாயு பகுப்பாய்வினைப் பயன்படுத்தி புகை வெளியீட்டினைப் பரிசோதித்தல்.
- தொழிலில் தூசி பம்புகளைப் பயன்படுத்தி தூசு மட்ட அளவீடுகளைப் பெறுதல்.
- சத்தமட்டமானிகளைப் பயன்படுத்தி சத்தமட்ட அளவீடுகளைப் பெறுதல்.
- அதியுயர் வெப்ப மட்டத்தைப் பரிசோதித்தல்.

ஆ. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார இடர் பற்றிய மதிப்பீடுகள

பாதுகாப்பு மற்றும் சுகாதார இடர்மதிப்பீடுகள், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார அலுவலர்களால் தொழிற்சாலை வளாகங்களில் மேற்கொள்ளப்படுவதுடன், பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துடன் தொடர்புபட்ட இடர்கள், ஆய்வு மற்றும் உரிய ஆவணங்களை மீளாய்வதன் மூலமான வேலையினூடாக மதிப்பிடப்படுகின்றன. இனங்காணப்பட்ட இடர்கள், நிறைவுக் கூட்டங்களில் சாரம்சப்படுத்தப்படுவதுடன், செம்மைப்படுத்துவதற்கான பரிந்துரைகள் உள்ளடங்கலாக இடர் முன்னுரிமைப்படுத்தல் அறிக்கையும் வழங்கப்படும்.

இ. தொழில் புரிவதற்கான உடற்றகுதி மதிப்பீடுகள்

பணிபுரியும் சூழலில் தீங்குகளின் வெளிப்பாட்டினைத் தவிர்ப்பதற்கும் மதிப்பிடுவதற்கும் வேலைத்தலத்திலுள்ள அனைத்து வேலையாளர்களும் உடனடியாக மதிப்பிடப்பட வேண்டிய தேவையுள்ளது. இதன்படி, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவக அணி தொழிற்சாலை வளாகங்களுக்கு விஜயம் செய்து, பணியாளர்களின் வெளிப்படுத்தல் நிலைகளை கண்காணித்தல் அல்லது அவர்கள் இந்நிறுவகத்திற்கு வருகைதந்து, தகுதிவாய்ந்த தொழில்நுட்பவியலாளர்களால் பரிசோதனைகளை மேற்கொள்வர். அவர்களது குறித்த பணி இலக்குக்கான உடற்றகுதியை உறுதிப்படுத்தும் வகையில் பரிசோதனை அறிக்கைகளின் அடிப்படையில் நம்பிக்கைக்குரிய மருத்துவ அறிக்கையொன்று ஆக்கப்படும். பின்வருகின்ற பரிசோதனை வசதிகள் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தில் காணப்படுகின்றன.

- கேட்கின்ற ஆற்றல் பற்றிய சோதனை
- வெவ்வேறு இரசாயனத் தாக்கம் பற்றிய இரத்தப் பரிசோதனை
- தொழில் புரிவதற்கான உடற்றகுதிச் சான்றிதழ்
- நுரையீரல் தொழிற்பாடு பற்றிய சோதனை
- பார்க்கும் திறன் பற்றிய சோதனை

2.2.1. விசேட செயற்பாடுகள்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, தொழிற்றுறையில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிலையைச் செம்மைப்படுத்துவதற்காகவும், அதற்கே உரியதாக தயாரிக்கப்பட்ட விசேட பயிற்சி, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துடன் தொடர்புபட்ட கருத்திட்டங்கள், பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடுகளும், கருத்தரங்குகளும் மற்றும் பாதுகாப்பு, சுகாதார தகைமை விருதுகள் வைபவம் போன்ற தொழிற்றுறைக்கு அதரவளிக்கும் வகையில் விசேட செயற்பாடுகளை நடத்துகின்றது. அதற்கே உரியதாக தயாரிக்கப்பட்ட விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களில் பல அத்தொழிற்றுறைகளின் விசேட வேண்டுகோளின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டு, புதிய தொழில்நுட்ப செயன்முறைகள் மற்றும் மனிதப் பண்புகள் காரணமாக தொழிற்றுறையால் முகம் கொடுக்கப்பட்ட புதிய சவால்களுக்காக வழங்கப்படுகின்றன.

இதன்படி, விசேட நிகழ்ச்சித் திட்டங்கள், வடிவமைக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படுகின்றன.


அ. விசேட பயிற்சிகள்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது பின்வரும் விசேட பயிற்சி மட்டங்களை வடிவமைத்துள்ளது.

- முதலாவது மட்டம்
- இரண்டாவது மட்டம்
- மூன்றாவது மட்டம்

இந்தப் பயிற்சிகள், பயிற்சி பெறுபவர்களின் கல்வி மட்டங்களை கவனத்தில் கொண்டு வடிவமைக்கப்படுகின்றன. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் உயர் தேசிய டிப்புளோமா (தே.வா.தொ.தகுதிமட்டம் 6), தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தேசிய டிப்புளோமா (தே.வா.தொ.தகுதிமட்டம் 5), தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் சான்றிதழ் கற்கைநெறி (தே.வா.தொ.தகுதிமட்டம் 4) மற்றும் விசேட குறுகியகால பயிற்சிகள் தொழிற்றுறைகளின் வேண்டுகோளின் அடிப்படையில் விசேடமாக விருத்தி செய்யப்படுகின்றன.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் பயிற்சி வழிமுறை பின்வருமாறு



வரைபடம் 2.1 பாடநெறி கட்டமைப்பு

குறுகியகால பயிற்சிகள், பயிற்சிகளின் காலப்பகுதி ஒன்று முதல் ஐந்து நாட்கள் வரை முதலாம் மட்ட பயிற்சிகளாக கருதப்படுகின்றன. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பின்வரும் பயிற்சி அமர்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

- தொழிற்றுறை வேலையாளர்களுக்கான கழிவுப் பொருள் முகாமைத்துவம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு
- நிர்மாணப் பாதுகாப்பு வேலைப் பயிற்சி அமர்வு
- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார அறிமுக அமர்வு
- தொழிற்றுறை தாதியர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
- சுகாதார பராமரிப்பு வேலையாட்களுக்கான பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
- அலுவலக வேலையாட்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
- ஆய்வுகூட வேலையாட்களுக்கு இரசாயனத்தைப் பாதுகாப்பாக கையாளுதல்
- ஹோட்டல் வேலையாட்களுக்கான உணவுப் பாதுகாப்பு
- தொழில்நுட்ப அலுவலர்களுக்கு இரசாயனத்தைப் பாதுகாப்பாக கையாளுதல்
- மன அழுத்த முகாமைத்துவம்

இந்தப் பயிற்சிகள், தொழிற்றுறையினால் ஒதுக்கப்படுகின்ற நேரத்தைக் கவனத்திலெடுத்து தொழிற்றுறையின் தேவைப்பாட்டின் அடிப்படையில் அனைத்தும் வளாகத்திற்குள் அல்லது வளாகத்திற்கு வெளியே மேற்கொள்ளப்படுவதுடன், பங்குபற்றியவர்கள் அனைவருக்கும் விசேட சான்றிதழொன்று வழங்கப்படுகின்றது.

இரண்டாவது மட்டப் பயிற்சி

இரண்டாவது மட்ட பயிற்சிகள், எந்த தொழிற்றுறையிலும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை முகாமை செய்வதற்கான தகுதியை வழங்குவதற்கு வடிவமைக்கப்பட்டிருந் நீண்டகால பயிற்சியாகக் கருதப்படுகின்றது. இந்தவகையான பயிற்சிகள், பாதுகாப்பு குழுக்களை நடத்தும் வகையில் அல்லது தீர்மானமெடுப்பதில் ஈடுபடக்கூடிய நிறைவேற்று தரத்திலுள்ளவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் சுகாதார முகாமைத்துவ முறைமைகளை முகாமை செய்வதில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு முக்கியமானதாகும். இந்தப் பயிற்சி, 750 மணித்தியாலங்களைக் கொண்ட 15 நாட்களுக்குள் முடிப்பதற்காக வடிவமைக்கப்படுவதுடன், தொழிற்றுறைப் பணியாளர்களுக்கு விசேட கவனம் வழங்கப்பட்டிருந்தது. இதன்படி, தொழில் புரிகின்ற பங்குபற்றுநர்களில் பெரும்பாலானோருக்கு அவர்களது வேலைநாட்களின் போது பங்குபற்ற நேரமின்மையால், பயிற்சியளிக்கும் இடம் மற்றும் வாராந்த அட்டவணைகளுக்கு விசேட கவனம் செலுத்தப்பட்டிருந்தது. தொழிற்றுறைகளின் வேண்டுகோளின் அடிப்படையில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், 15 நாட்கள் தொடர்ந்து இந்தப் பயிற்சிகளை ஒழுங்கமைப்பதற்கு நெகிழ்வுப் போக்குடையதாகவிருக்கின்றது. இந்த அமர்வு தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தால் பரீட்சையொன்றுடன் முடிவுறுத்தப்படுவதுடன், பரீட்சையில் வெற்றிகரமாக பூர்த்திசெய்துள்ள பங்குபற்றுநர்களுக்கு மட்டுமே சான்றிதழ் வழங்கப்படும். இந்த கற்கைநெறிக்கான நுழைவுத் தகுதி கல்விப் பொதுத் தராதர உயர்தரமாகும்.

• மூன்றாவது மட்டப் பயிற்சி

பாதுகாப்பான வேலைத்தலம் என்பது தொழில்சார் ஊறினைத் தடுப்பதற்கான உபாயத்தினை ஆக்குகின்றதொன்றாகும். அவ்வாறு செய்வதற்கு தகுதியுள்ள பாதுகாப்பு அலுவலர்கள் தொழிற்றுறையில் முக்கிய பங்கினை வகிக்கின்றனர். இந்த பாதுகாப்பு அலுவலர்கள், இலங்கையில் தேசிய தொழில்சார் தகைமையாக சான்றுப்படுத்தப்பட்டுள்ள மிகவும் உயர்ந்த தகைமையான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தேசிய

டிப்புளோமாவுடன் தகைமையுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். இந்த டிப்புளோமாவின் பாடவிதானம், தொழிற்றுறையுடன் தொடர்புட்ட பிரச்சினைகளின் தேவைகளுக்கு உதவி விருத்தி செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பு அலுவலரொருவராக தகைமை பெறுவதற்கு 1500 மணித்தியாலங்களுக்குள் மூன்று கையேடுகள் நிறைவு செய்யப்படுதல் வேண்டும். மேலும், மாணவர்கள், சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான புள்ளிகளைப் பெறுவதற்கு பகுதியளவான நிறைவேற்றத்திற்காக கருத்திட்ட அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்க வேண்டியிருக்கின்றது. பட்டமளிப்பிற்கு முன்னதாக தொழில் புரியக்கூடிய வாய்ப்பு பற்றிய மதிப்பீடு மேற்கொள்ளப்படும்.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் அடுத்த முன்னேற்றம், 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படவுள்ள தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் உயர் தேசிய டிப்புளோமா என்பதாக இருக்கும்.

அ. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார கருத்திட்டங்கள்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், சர்வதேச தொழில் தாபனத்தினதும், பிறவேறு தேசிய, சர்வதேச அமைப்புகளினதும் ஒருங்கிணைப்புடன் தொழிற்றுறையில் பாதுகாப்பு கலாசாரத்தை செம்மைப்படுத்துவதற்கான குறிக்கோளுடன் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார கருத்திட்டங்களை மேற்கொள்கின்றது. பெரும்பாலும், இந்த கருத்திட்டங்கள் நாட்டில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தெரிவு செய்யப்பட்ட முக்கிய பிரச்சினைகளை மையப்படுத்தி நடமுறைப்படுத்துகின்றன.

ஆ. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார தகைமை விருதுகள் போட்டி

இ. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடு

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடு, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் வருடாந்தம் ஒழுங்கமைக்கப்படுகின்ற பிரதான நிகழ்வுகளில் ஒன்றாகும். இந்த மாநாட்டின் குறிக்கோள், சர்வதேச நிகழ்ச்சித்திட்டத்தில் முக்கியமானதான, இலங்கை தொழிற்றுறைகளுக்கிடையில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துடன் தொடர்புபட்ட நாளதுவரைப்படுத்தப்பட்ட சர்வதேச. உள்நாட்டு தகவல்களைப் பரப்புவதாகும். இந்த மாநாட்டில் 500 இற்குமதிகமான தொழில் தருநர்கள் மற்றும் உயர் முகாமைத்துவத்தினர் பங்கு பற்றியிருந்தனர். ஆதிகளவான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துடன் தொடர்புபட்ட ஆக்கமொன்று காட்சிப்படுத்தப்பட்டதும், இந்த மாநாட்டின் முக்கிய செற்பாடுகளிலொன்றாகும். இந்த மாநாட்டினை ஒழுங்குபடுத்துபவர்கள், அறிவினைப் பரப்புவதற்கான அடித்தளத்தைப் பங்குபற்றுநர்களுக்கிடையே வழங்குகின்ற தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வலையமைப்பொன்றை உருவாக்குகின்றனர்.

ஈ. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார ஆய்வு

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், பல்கலைக்கழகங்கள் மற்றும் சாட்சியத்தின் அடிப்படையில் சிக்கலான தீர்மானங்களை எடுப்பதற்கு எமது உதவி தேவைப்படுகின்ற தொழிற்றுறை அல்லது பிறவேறு தாபனத்தின் ஒருங்கிணைப்புடன் எமது ஆய்வுக் கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

உ. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார தொழில்வல்லுநர் ஒன்றியம்

இது, எமது மாணவர்கள் மற்றும் தொழிற்றுறை அக்கறைதாரர்களுடன் பலமான வலையமைப்பை விருத்தி செய்வதற்காக தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் அனைத்து மாணவர்களும் உறுப்பினர்களாக இணைவதற்கு தகைமை பெற்றுள்ளதுடன், அவர்களது தகைமைகளை அதிகரிப்பதுடன், தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஆதரவளிப்பதற்கு அவர்களுக்கு உரிய வகையில் ஒன்றிய உறுப்புரிமை, தொழில்நுணுக்க உறுப்புரிமை, பட்டதாரி உறுப்புரிமை மற்றும் பட்டய உறுப்புரிமை போன்றவை வழங்கப்படும். இந்த ஏற்றத்தின் உச்ச ஒழுங்கு முறையானது, அவர்களது தொழில் முன்னேற்றத்தில் அவர்களது சாதனைகளை மதிப்பிட்டு சக உறுப்புரிமை வழங்கப்படும்.

ஊ. CSR கருத்திட்டங்கள்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், வெள்ளம், வறட்சி போன்ற அத்தகைய தேசிய அனர்த்தங்களில் உதவி தேவையான குழுமங்களுக்கு எப்போதும் ஆதரவளிக்கின்றது. இந்நிறுவகம், சாட்சியத்தினடிப்படையில் நிலைமையை மதிப்பிடுதல் மற்றும் அழிவு நிலைமையிலிருந்து வெளிவருவதற்கு ஆதரவளிக்கின்ற அதே வேளையில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிலையை உயர்த்துவதற்கு முயற்சிக்கின்றது

2.1.3 சர்வதேச கூட்டிணைவுகள்

தரப்பட்டுள்ள குறிக்கோளின்படி தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, இலங்கை தொழிற்றுறைகளில் பாதுகாப்பினையும், சுகாதார நிலைமையும் விருத்தி செய்வதற்கு ஏனைய பல சர்வதேச தரப்புகளுடன் கூட்டிணைந்து செயற்படுகின்றது. மலேசியா, சிங்கப்பூர் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் மற்றும் இந்தியா, புரூணை, இந்தோனேசியா, சீனா, யப்பான் மற்றும் கொரியா ஆகிய நாடுகளிலுள்ள ஆசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார ஆராய்ச்சி நிறுவகங்கள் போன்ற அத்தகைய சர்வதேச முகவர்கள் இலங்கை தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்துடன் கூட்டிணைந்து செயற்படுவதுடன், அதிகளவான நாளதுவரைப்படுத்தப்பட்ட அறிவினைப் பகிர்கின்றது.

2.2 சேவைத் தரத்தினைச் செம்மைப்படுத்துதல்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், அதன் சேவை வழங்கலில் தொடர்ச்சியாக அதன் சேவையை தரமுயர்த்திக்கொண்டிருக்கின்றது. இந்நிறுவகம், எமது வாடிக்கையாளர்கள் அனைவரும், நட்புரீதியான சூழலையும், இலகுவாக அடையக்கூடிய முறைமைகளையும் பயன்படுத்துபவர்களாக இருப்பர் என்று எப்போதும் நம்புகின்றது. இதன்படி, சேவைதரச் செம்மைப்படுத்தல்கள் தொடர்பில், உட்கட்டமைப்பு விருத்திகள் மற்றும் தர முகாமைத்துவ முறைமை சான்றுப்படுத்துதல் விருத்திகள் போன்ற அத்தகைய இரண்டு உபாயங்கள் கவனத்திலெடுக்கப்படுகின்றன.

2.2.1 தர முகாமைத்துவ முறைமையை சான்றுப்படுத்துதல்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, சேவை வழங்கல முறைமைப்படுத்தலினூடாக சேவைத் தரச் செம்மைப்படுத்தல்களை அடைய முடியும். இவ்வாறு செய்யும் நோக்கில், இந்தநிறுவகம், ஐளுழு 14001 தர முகாமைத்துவ முறைமைச் சான்றுப்படுத்தலையும், எமது அனைத்து பயிற்சிகளுக்கும் தேசிய வாழ்க்கைத் தொழில்தர நியமங்களையும் பெற்றுள்ளது.

2.2.2 தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தில் கட்டமைப்பு முன்னேற்றங்கள்

வாடிக்கையாளர்கள் எமது சொத்து. ஆகவே, இந்நிறுவகம், எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியான, சௌகரியமான சூழலை வழங்குவதற்கு அதன் உட்கட்டமைப்பை விருத்தி செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

மேலும், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், அதனது பணியாளர்களுக்கு சுமூகமான வேலைச் சூழலை வழங்குவதன் மூலம் பணியாளர்களின் அதிகூடிய செயல்திறனை பெற்றுக்கொள்ள முடியுமென்று நம்புகின்றது. இந்தத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது பழைய கட்டடமொன்றில் தொழிற்படுவதனால் இதன் கட்டமைப்பை விருத்தி செய்வதற்கு தன்னை அர்ப்பணித்துள்ளது. இந்நிறுவகம், அதற்கான புதிய ஆய்வுகூடத்தையும், புதிய கேட்போர்கூடத்தையும், நூலகத்தையும் விருத்திசெய்தல் போன்ற அத்தகையவற்றுக்கான ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

மூன்றாம் அத்தியாயம்

மூன்றாம் அத்தியாயம் நிறுவகத்தின் முன்னேற்றம்

நிறுவகத்தின் முன்னேற்றம்

3.1 சேவை வழங்கப்படுவதன் முன்னேற்றம்

சேவை நிலையங்களில் சுகாதாரப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளனவா என்பதை சோதிப்பது நிறுவகத்தின் நாளாந்தப் பணியாகும். அதன்போது சுற்றாடல் நிலைமைகளை மேற்பார்வை செய்வது மற்றும் இறைச்சல், ஒளி, வெப்பநிலை, தூசி மற்றும் வளி பற்றிய நிலைமைகளை சோதித்து ஊழியர்களுக்கு தீங்கு ஏற்படக்கூடிய அபாயத்தைக் குறைக்க நிறுவனத்தினால் பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

சுற்றாடல் ஆய்வுகள்	நிறுவனங்களின் எண்ணிக்கை
இறைச்சல்	706
ஒளி	1185
வெப்பநிலை	698
தூசி	768
வளி	159
வளி பற்றிய ஆய்வு	150

அட்டவணை 3.1 சுற்றாடல் அளவீட்டு ஆய்வு அளவு

2020 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனைகளின் எண்ணிக்கை பின்வருமாறு.

நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்களின் சுகாதார நிலைமையானது சேவைகளை வழங்குவதற்குப் பொருத்தமான மட்டத்தில் உள்ளதா என்பதை பரிசோதிப்பதற்காக நிறுவனத்தினால் மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்போது சேவை வழங்குநர்களின் பார்வை போன்றவற்றைப் பரிசோதித்து சேவையில் ஈடுபடுவதற்கு உகந்த வகையில் ஆரோக்கியமாக உள்ளனரா என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது.

3.1.2 விசேட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

நிறுவனங்களில் சுகாதாரப் பாதுகாப்பினை பேணிச் செல்வதன் பொருட்டு நிறுவன மட்டத்தில் சுகாதார மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவதன் மூலம் பெரும் உதவி கிடைக்கின்றது. அதன்போது உரிய கோட்பாட்டு ரீதியான அறிவு மற்றும் நடைமுறை ரீதியான அனுபவங்கள் நிறைந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பது தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனத்தினால் நடைமுறைபடுத்தப்படுகின்ற ஒரு விசேட நிகழ்ச்சித்திட்டமாகும். 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் பின்வருமாறு அமைகின்றது.

மட்டம்	நிகழ்ச்சித்திட்டம்	காலப்பகுதி
முதலாம் மட்டம்	தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய டிப்ளோமா பாடநெறி	2020 செப்டம்பர்02 - குழுக்கள்19 2020 செப்டம்பர் 26 - குழுக்கள் 20 2020 அக்டோபர் 18 - குழுக்கள் 21
இரண்டாம் மட்டம்	தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய சான்றிதழ் பாடநெறி	2020 ஜனவரி 25 - குழு 35 2020 பிப்ரவரி 08 - குழு 36 2020 செப்டம்பர் 26 - குழு 37 2020 அக்டோபர் 28 - குழு 38
மூன்றாம் மட்டம்	Access Engineering Technical Staff காக கட்டுமானத் துறைக்கான ஆறு நாள் செயலமர்வு	2020 ஜனவரி 03
	Confine Space ஒரு நாள் செயலமர்வு	2020 பிப்ரவரி 13
	Safe Handling Hazard Materials ஒரு நாள் செயலமர்வு	2020 பிப்ரவரி 14
	தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய அடிப்படை பாடநெறி (Foundation Course)	2020 பிப்ரவரி 17
	Route Cause Analysis ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டம	2020 மார்ச் 12

அட்டவணை. 3.2 விசேட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

2020 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட தொற்று நோயானது நிறுவனத்தில் பாடநெறிகளை எதிர்பார்க்கப்பட்ட அளவில் மேற்கொள்வதற்கு தடையாக அமைந்தது. சாதாரண நிலைமையின் கீழ் நிறுவனத்தினால் வருடம் ஒன்றில் இரண்டு டிப்ளோமா பாடநெறிகள் நடத்தப்படுகின்ற போதிலும் 2020 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய தொற்றுநோய் நிலைமையின் காரணமாக ஒரு டிப்ளோமா பாடநெறியை மட்டுமே பூர்த்தி செய்ய முடிந்தது. அதேவேளை தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய சான்றிதழ் பாடநெறிகள் இரண்டை பூர்த்தி செய்வதற்கு 2020ஆம் ஆண்டில் முடிந்துள்ளது. சாதாரண நிலைமையின் கீழ் வருடம் ஒன்றில் சுமார் ஆறு சான்றிதழ் பாடநெறிகள் நடத்தப்பட்டன.

நிறுவனத்தினால் நடத்தப்படுகின்ற தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய அடிப்படை பாடநெறி 2020 பிப்ரவரி மாதம் 14ஆம் திகதி தொடக்கம் 10 நாட்கள் நடத்தப்பட்டன. 2019 ஆம் ஆண்டில் முதற்தடவையாக நடத்தப்பட்ட அடிப்படைப் பாடநெறியின் இரண்டாவது குழுவினர் வெற்றிகரமாக பாடநெறியை பூர்த்தி செய்தனர். இதன்போது எக்ஸஸ் இன்ஜினியரிங் நிறுவனத்தின் பங்களிப்பும் எமக்கு பெற்றுத்தரப்பட்டது. க.பொ.த. சாதாரண தரம் சித்தியடைந்த 25 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு பற்றிய கோட்பாட்டு ரீதியான அறிவு மற்றும் செயற்பாட்டுப் பயிற்சி எதுவித கட்டணமும் இன்றி வழங்கப்பட்டது. பாடநெறியின் இறுதியில் அந்த மாணவர்கள் ஹொல்சிம் கூட்டுத்தாபனத்திலும் எக்ஸஸ் எஞ்சினியரிங் நிறுவனத்திலும் தொழில்களில் இணைக்கப்பட்டனர்.

2020 ஆம் ஆண்டில் கட்டுமானத் துறைகளுக்காக அறு நாள் செயலமர்வும், ஊழகெனெ ளுியஉந பற்றிய ஒரு நாள் செயலமர்வும் ளுயகந ர்யனெடபை ர்யணயசன அயவநசயைடள பற்றிய ஒரு நாள் செயலமர்வும் ளுயகந ர்யனெடபை ர்யணயசன அயவநசயைடள பற்றிய ஒரு நாள் செயலமர்வும் நடத்தப்பட்டன. சாதாரணமாக பயிற்சிப் பாடநெறிகளுக்கு மேலதிகமாக 15 க்கு மேற்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நிறுவனத்தினால் நடத்தப்படுகின்ற போதிலும் 2020 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய கொவிட் - 19 நோய் நிலைமையின் காரணமாக அவ்வாறு மேற்கொள்ள முடியவில்லை. எமது டிப்ளோமா, சான்றிதழ் மற்றும் அடிப்படை பாடநெறிகள் நடத்தப்படுகின்ற மாணவர்களுக்கு வருடாந்தம் சான்றிதழ் வழங்கும் விழா நடத்தப்படுகின்ற போதிலும் 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட சுகாதார சட்ட திட்டங்களின் பிரகாரம் அவ்வாறு மேற்கொள்ள முடியவில்லை.

3.1.3 கருத்திட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்

கோவிட் - 19 தொற்று நோயின் காரணமாக பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு சுகாதார பாதுகாப்பு முறைகளை பின்பற்றி தமது தொழில் முயற்சிகளை மீண்டும் முன்னெடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஒழுங்கு செய்து வழங்கும் பணிகள் சர்வதேச தொழிலாளர் அமைப்புடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டன. அதன்போது கோவிட்-19 ஆபத்து நிலைமை அதிகமாக காணப்பட்ட மேல் மாகாணத்தின் களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் இந் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. பிரதேச செயலகங்களினால் தெரிவுசெய்யப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் 200 பேர் இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் முயற்சியாளர்களின் வர்த்தக நிலையங்களுக்குச் சென்று அவர்களுக்கு கோவிட் 19 நோய் நிலைமையின் மத்தியில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பாக நடைமுறைப்படுத்த வேண்டிய வேலைத்திட்டம் மற்றும் தொழில்சார் ரீதியில் ஏற்படக்கூடிய விபத்துகள் தொடர்பாக விழிப்பூட்டல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது கோவிட் 19 நோய் நிலைமைக்கு முகங்கொடுக்க வேண்டிய விதம் தொடர்பான வழிகாட்டல்கள் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டன. தொற்றுநோய் நிலைமையின் மத்தியில் நிதி நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ள தொழில் முயற்சியாளர்களுக்கு கோவிட் 19 நோய் நிலைமையின் மத்தியில் பின்பற்றவேண்டிய சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான உபகரணங்கள் (சின்க், தொற்று நீக்கித் திரவம், சவர்க்காரம், கை கழுவுவதற்கான திரவங்கள், முகக் கவசங்கள், கையுறைகள் போன்றவை) சர்வதேச தொழிலாளர் அமைப்பின் நிதி அனுசரணையில் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாம் கட்டம் 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிவுறுத்தப்பட்டது. குறிப்பாக இந்த கருத்திட்டத்தினூடாக உணவு உற்பத்தி சார்ந்த தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்ற தொழில் முயற்சியாளர்களுக்கு பெரும் உதவி பெற்றுக்கொள்ள முடிந்தது. அதேவேளை தமது வர்த்தக நடவடிக்கைகளில் இடம்பெறக்கூடிய விபத்துக்கள் தொடர்பாக அவர்கள் முறையாக விழிப்பூட்டப்பட்டனர்.

நாட்டில் நிலவுகின்ற தொற்று நோயின் மத்தியில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இணைய வழி முறையில் நடத்தப்பட்டன. இணைய வழி முறையில் நடத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்க முடியாத தொழில் முயற்சியாளர்களை விழிப்பூட்டுவதற்கு கோவிட் -19 சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக ஆறு செயலமர்வுகள் மீரிகம, களனி, பேருவளை, மொரட்டுவை, நீர்கொழும்பு மற்றும் புலத்சிங்கள ஆகிய பிரதேசங்களில் நடத்தப்பட்டன. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய கோட்பாட்டு ரீதியான

விழிப்பூட்டல்களையும் செயற்பாட்டு ரீதியான விழிப்பூட்டல்களையும் அவர்களுக்கு வழங்குவதற்கு எமக்கு வாய்ப்புக் கிடைத்தது.

கோவிட்- 19 தொற்றுநோய் நிலைமையின் மத்தியில் தொழிலாளர்களை பாதுகாப்பாக சேவையில் ஈடுபடுத்தும் பொருட்டு தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட பணி

1. தொழில்துறைகளுக்கு வழிகாட்டல்களை வழங்குதல்

கைத்தொழிற்சாலைகளில் பணியாற்றும்போது கோவிட்- 19 தொற்றுநோயிலிருந்து பாதுகாப்படைவதன் பொருட்டு பின்பற்றவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் விழிப்பூட்டல்களை உள்ளடக்கி புத்தகமொன்று அச்சிடப்பட்டு தொழிற்சாலைகளுக்கு அவை இலவசமாக வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.



2. விழிப்பூட்டல் சுவரொட்டிகள் தயாரிக்கப்படுதல்

தொற்றுநோய் நிலைமையின் மத்தியில் கைத்தொழிற்சாலைகள் பேண வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கை முறைகள் தொடர்பாக விழிப்பூட்டும் சுவரொட்டிகளைத் தயாரித்து கைத்தொழிற்சாலைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.




කොරෝනා වයිරසය සමඟ එදිනෙදා කටයුතු කරගෙන යාම
මුළු ලෝකයටම තර්ජනයක් වෙලා ඇති මාරාන්තික 'කොරෝනා වයිරසය' ශ්‍රී ලංකාවටද විශාල තර්ජනයක් විය හැකිය. මේ වයිරසය ගැන නිසියාකාරව දැනුවත් වීම, මෙම අවධානමෙන් ආරක්ෂා වීමට අපට උදව් වේවි.
රෝග ලක්ෂණ
• හෙම්බිරිස්සාව • උගුරේ වේදනාව
• හිසරදය • උණ
• කැස්ස • ඇඟපත රුදුව
රෝග බෝවන ක්‍රම
• රෝගය වැළඳුණු රෝගියකු මගින්
• කැස්ස හා කිවිසුම් යාමෙන් වාතයට එක්වන කෙළ බිඳිති මගින්
• වැළඳුණු අයකු සමීපව හෝ වැළඳ ගැනීම මගින්
• වෛරසය තැවරුණු තැනක් හෝ දෙයක් ස්පර්ශ කොට මුඛය, නාසය හෝ ඇස ඇල්ලීම මගින්
ආරක්ෂාවට පියවර
• විෂබීජනාශක දියර හෝ සබන් මගින් දෑත් නිවැරැදි ලෙස පිරිසිදු කර ගන්න
• ජනතාව වැඩි වශයෙන් ගැවසෙන තැන්වලදී මුඛ ආවරණයක් (N95/Surgical Mask) පැළඳීම සහ කැස්ස හෝ කිවිසුම් ඇති විට මුඛ ආවරණයක් භාවිතා කරන්න
• කැස්ස හෝ කිවිසුම් ඇති වන විට මුඛ ආවරණයක් නොමැති නම් වැලමිටෙන් නාසය, මුඛය ආවරණය කරන්න
• ඇඟ සීතල හෝ උණ වැනි රෝග ලක්ෂණ ඇති රෝගී අයකු සමඟ සමීප ඇසුර හෝ වැළඳ ගැනීමෙන් වැළකින්න
• සේවා ස්ථානයේ හා පොදු ස්ථාන වල මීටරයක දුරින් සිටීම
ඉහත රෝග ලක්ෂණ ඇත්නම් වහාම වෛද්‍යවරයකු වෙත යොමු වන්න
ශ්‍රී ලංකා ක්ෂුද්‍ර හා කුඩා ව්‍යවසාය අංශයේ සෞඛ්‍ය සම්පන්න සමාජ-ආර්ථික ප්‍රකෘති ව්‍යාපෘතිය
International Labour Organization
Ministry of Skills Development, Employment & Labour Relations
NIOSH National Institute of Occupational Safety and Health • Sri Lanka
ජාතික වෘත්තිය සුරක්ෂිතතා හා සෞඛ්‍ය ආයතනය
www.niosh.gov.lk


වයිරසය අප ලඟම විය හැකියි!
කොවිඩ්-19 රෝග වාහකයා මිනිසාමයි. පුරවැසි ඔබ අපමයි. නොදැන අප තුළද වයිරසය තිබිය හැකියි. නොසැලකිල්ලෙන්, නොදැනුවත්කමින් එය පැතිරවීමට ඉඩ ඇත. ඔබ අප රටක් විනාශ කළ අයකු වීමට පෙර, මේ මොහොතේම ක්‍රියාත්මක වෙමු. රජය විසින් දැනුවත් කර ඇති සෞඛ්‍ය ක්‍රියා හා නීති දැඩිව, විනයක් ඇතිව පිළිපදිමු.
නිවෙස් තුළම රැඳෙමු. රට වෙනුවෙන් යුතුකම ඉටු කරමු !
Ministry of Skills Development, Employment & Labour Relations
NIOSH
National Institute of Occupational Safety and Health - Sri Lanka


කෑම ගැනීමේදී පුද්ගලයින් දෙදෙනෙකු අතර අඩුම තරමින් මීටරයකවත් දුරක් තබා ගැනීම
1 Meter
අත් පිරිසිදු කර ගැනීමට ඇති ස්ථාන අතර අවම වශයෙන් මීටරයක දුරක් තබා ගැනීම
1 Meter
සෑම ආහාර වේලකින්ම පසුව පිඟන් හා වීදුරු සබන් (Disinfectant) යොදා පිරිසිදු කිරීම (දුණු වතුරෙන් සේදීම වඩාත් යෝග්‍ය වේ)
අත් පිරිසිදු කරගැනීමට ඇල්කොහොල් අඩංගු විෂබීජනාශක දියර හා පාවහන් විෂබීජහරණය සඳහාම තනා ඇති පාපිසි සූදානම් කර තැබීම
මෙහෙයුම අවසන් නැත
භෝජනාගාරයේදී සෞඛ්‍යාරක්ෂිතව හැසිරෙන්න
සේවා ස්ථානයේ භෝජනාගාරය, එක් වර විශාල සේවක පිරිසක් එක් වන හා සේවක සුහදත්වය සමීප කරන පොදු ස්ථානයකි. නමුත් කොවිඩ්-19 වෛරස ව්‍යාප්ත නවමත් අවසන් වී නොමැති බැවින් ආරක්ෂක පුරුදු අනුගමනය කිරීමට අපට සිදුවන අතර ඒ පුරුදු නිරතුරුව ඉටු කරමු.
කොවිඩ්-19 මිරිදනයට සහය දෙමු!
සෑම ආහාර අනුභවයකින්ම පසුව මේස හා පුටු විෂබීජනාශක යොදා පිරිසිදු කිරීම
ජලය පානය සඳහා ඉවත දැමිය හැකි කෝප්ප භාවිතයට තැබීම
කෑම ගැනීමේදී තවත් කෙනෙකුට ආහාර හුවමාරුව නොකිරීම
ආහාර ගන්නා පෝළිමේ දෙදෙනෙකු අතර මීටරයක දුර පවත්වා ගෙන යාම
භෝජනාගාරය තුල සමාජ ක්‍රියාකාරකම් / මුණගැසීම් / පුවත් පත් බැලීම් අවම මට්ටමකින් පවත්වා ගෙන යාම
භෝජනාගාරයට ඇතුල්වෙන තැන පාදයෙන් ක්‍රියාත්මක තළ හැකි වතුර කරාම /Elbow taps සමඟ සබන් හෝ විෂබීජනාශක දියර හා පාදයෙන් විවර කළ හැකි කසළ බඳුන් ලැස්ති කර තිබීම
ආහාර පිළියෙල කරන හා ආහාර පිළිගන්වන පුද්ගලයින් නියම කරන ලද පුද්ගල ආරක්ෂිත පැළඳුම් ඇඳ තිබීම (අත් වැසුම්, මුඛ ආවරණ, මුහුණු ආවරණ)
ජාතික වෘත්තීය සුරක්ෂිතතා හා සෞඛ්‍ය ආයතනයේ ප්‍රකාශනයකි
Ministry of Skills Development, Employment & Labour Relations
NIOSH National Institute of Occupational Safety and Health • Sri Lanka
ජාතික වෘත්තීය සුරක්ෂිතතා හා සෞඛ්‍ය ආයතනය
011 2 585 425, 011 2 598 672
www.niosh.gov.lk

මෙහෙයුම අවසන් නැත
ගමනාගමනයේදී වගකීම ඉටු කරමු

කොවිඩ්-19 වෛරසය උවදුර තවමත් අවසන් වී නොමැති අතර නිරන්තරයෙන් ආරක්ෂිත සෞඛ්‍ය පුරුදු අනුගමනය කිරීමට සිදු වී ඇත. කාර්යාල වාහන භාවිතයෙදීත් අප ඉතා ප්‍රවේශම් විය යුතු අතර ඒ ප්‍රවේශම වෛරසය තවත් කෙනෙකුට පැතිරීම නැවැත්වීමටය. අප ආරක්ෂා වී කොවිඩ්-19 මර්දනයට සහාය වෙමු!



කාර්යාල වාහන භාවිතයෙදී

කවුළු (shutters) විවර කල හැකි, වාහය ලෙහෙසියෙන් එහා මෙහා ගමන් කල හැකි වාහනයක් වීම



ගමන් ගන්නා පිරිස අතර ආරක්ෂිත දුර ප්‍රමාණය තබා ගෙන යාම



වාහනයේ දොර අසල අත් පිරිසිදු කර ගැනීමට විෂබීජනාශක දියර බෝතල් සවි කිරීම



රියැදුරු අනෙක් මඟින්ගෙන් වෙන් කිරීම (ඉටි හෝ සුදුසු අමු ද්‍රව්‍යයක් යොදා)



රියදුරුගේ වගකීම

දිනපතා ස්වයං සෞඛ්‍ය ඇඟයීමක් හා එහි වාර්තාවක් පවත්වාගෙන යාම



රාජකාරිය අතර හෝ නිම වීමෙන් පසුව කිසිවෙකුට රථය තුලට ඇතුලු වීමට ඉඩ නොදීම



විෂබීජනාශක නිතරම වාහනය තුල තැබීමට වග බලා ගැනීම



වාහනය මඟින් සමඟ පදවන වේලාවන්වලදී මුහුනු ආවරණයක් පැළඳීම



වාහනය විෂබීජහරණය කිරීමේදී


සෑම ගමනකට පෙර වාහනය හොඳින් විෂබීජහරණයට ලක් කිරීම

විෂබීජහරණය කිරීමේදී විශේෂයෙන් සැලකිය යුතු කරුනු අතර

- වාහනයේ පිටත හා රෝද විෂබීජහරණය
- වාහනයේ ඇතුළත විෂබීජහරණය



විෂබීජහරණයෙන් පසුව වාහනය අඩුම තරමින් විනාඩි 15 වත් වාතයට නිරාවරණය කර තැබීම



මඟින්ගේ වගකීම

වාහනයට ඇතුල්වීමේදී හා පිටවීමේදී විෂබීජනාසකයකින් දෑත් පිරිසුදු කර ගැනීම



මුඛ ආවරණ ගමනාන්තය දක්වා පැළඳ සිටීම



කුමන හෝ රෝග ලක්ෂණයක් ඇත්නම්, සෙසු අය අනතුරේ නොදමා නිවසේ රැඳීම හා වහාම වෛද්‍යවරයකු ඇමතීම



ජාතික වෘත්තීය සුරක්ෂිතතා හා සෞඛ්‍ය ආයතනයේ පණිවිඩයකි

Ministry of Skills Development, Employment & Labour Relations

NIOSH National Institute of Occupational Safety and Health - Sri Lanka

ජාතික වෘත්තීය සුරක්ෂිතතා හා සෞඛ්‍ය ආයතනය

අංක. 97, පාර්ලිමේන්තු පාර, කොළඹ 05 • 011 2 585 425, 011 2 598 672

www.niosh.gov.lk


මෙහෙයුම අවසන් නැත
කවදත් ව්‍යසනයකදී රටේ මූලිකත්වය ගත් විරෝධාර රණවිරුවෝ, කොරොනා උවදුරෙදිත් මෙතෙක් පෙරමුන ගත් අය අතර පෙරමුනේ වුහ. කොවිඩ්-19 වෛරසය තවම මුළුමනින්ම පහ වී නැති අතර, මේ... තවදුරටත් විරෝධාර ඔබගේ සේවය රටට අත්‍යාවශ්‍යම කාලයයි. ජනතාව ආරක්ෂා කරන ඔබ... ආරක්ෂා වී සිටිය යුතුමයි.
එබැවින් මේ පුරුදු, පුරුදු කර ගමු !
දිනපතා ස්වයං පරීක්ෂණයට ලක් වීම
රෝගියකු හෝ සැකසහිත පුද්ගලයකු පරීක්ෂාවට පෙර අනිවාර්යයෙන්ම ආරක්ෂිත ඇඳුම් පැළඳීම
6ft
සමාජ දුරස්ථභාවය තබා ගැනීම
ගමනාගමනයේදී
සේවා ස්ථානයේදී
සේවා ස්ථානයේ භෝජනාගාරයේදී
පිටත රාජකාරී සේවයේදී
සේවා ස්ථානයේ මිතුරන් හමුවේදී
කිරතුරුව සබන් හෝ විෂබීජ නාශකයක් යොදා තත්පර 20 පමණ හොඳින් දැත් සේදීම
ඔසිසින් පිටතදී, ගමනාගමනයේදී සහ රාජකාරියේදී මුඛ ආවරනයක් පැළඳීම
ආහාර පාන අනෙකුත් අය සමඟ හුවමාරුවෙන් වළකින්න
නේවාසිකාගාරයේ තුල ආහාර බැසීමෙන් හෝ ආහාර තැබීමෙන් වළකින්න
හැම විටම හිඳින ඇඳුමක් හාවිතයෙදී තමන්ගේම ඇඳ ඇතිරිලි හා කොට්ට පමණක් හාවිතා කිරීම
ඔබගේ හිඳ ඇඳුම් (UNIFORM) පිටතින් ගළවා පිරිසිදු වී, නේවාසිකාගාරයට හෝ කවාතැනට ඇතුලු වීම
කොවිඩ් මෙහෙයුමකට පෙර හා පසු හාවිතා කරන ආයුධ හා උපකරණ විෂබීජහරණය කිරීම
සෑම විටම එක් කණ්ඩායම් ක්‍රමවේදයකට දිගටම සේවයේ යෙදීම
කිවාඩු අවස්ථා වලදී සමාජ සම්බන්ධතා අවම කිරීම
ජාතික වෘත්තීය සුරක්ෂිතතා හා සෞඛ්‍යය ආයතනයේ පණිවිඩයකි
Ministry of Skills Development, Employment & Labour Relations
NIOSH
කොවිඩ්-19 රෝග ලක්ෂණ ඇති වූ හොත් ඉක්මණින් සෞඛ්‍යය පරීක්ෂකවරයෙකු හෝ වෛද්‍යවරයකු අමතන්න

நான்காம் அத்தியாயம்

2020 ஆம் ஆண்டின் தனிச்சிறப்பான வெற்றிகளும் சவால்களும்

நிறுவகத்தின் தனிச்சிறப்பான வெற்றிகளும் சவால்களும்

2020 ஆம் ஆண்டு ஏற்பட்ட உலகளாவிய தொற்றுநோய் நிலைமையின் காரணமாக உலக மற்றும் தேசிய பொருளாதாரத்தில் பின்னடைவு ஏற்பட்ட போதிலும் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனத்திற்கு அத்தாக்கத்தை குறைத்துக்கொள்ள முடிந்தது. நிறுவனத்தின் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அவ்வகையிலேயே அடைந்துகொள்ள முடியவில்லை என்றபோதிலும் 11,057,350 ரூபாவிலான நிகர இலாபத்தை ஈட்டிக்கொள்ள முடிந்தது.

தொற்றுநோய் நிலைமையின் மத்தியில் ஆக்கபூர்வமான வகையில் புதிய பரிமாணங்களுடன் நிறுவனத்தின் பணிகளை நெறிப்படுத்தியதன் ஊடாக இந்த வெற்றியினை அடைந்து கொள்ள முடிந்தது. அதன்போது நிறுவனத்தினால் நடத்தப்படுகின்ற பாடநெறிகள் இணையவழி ஊடாக நடத்தப்படுதல், தொற்றுநோய் நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக கைத்தொழிற்சாலைகளுக்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதற்காக புதிய நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் போன்ற கால ரீதியில் தேவைப்படுகின்ற நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வதன் மூலம் தொற்றுநோய் நிலைமையில் இருந்து வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ள நிறுவனத்திற்கு முடிந்தது.

2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கோவிட் - 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக எமது நிறுவனம் எதிர்பார்த்த வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியாமை நிறுவனம் முகங்கொடுத்த பிரதான பிரச்சினையாக சுட்டிக்காட்ட வேண்டும். தொற்றுநோய் நிலைமையின் மத்தியில் சேவைகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை முறைகள் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் போதியளவு பணியாளர்கள் சேவைக்கு வருகை தராதமையினால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வது கடினமாக அமைந்தது. இரண்டு பணியாளர்கள் தமது தனிப்பட்ட தேவைகளின் நிமித்தம் நிறுவனத்திலிருந்து விலகிச் சென்றதன் காரணமாக பயிற்சி பெற்ற பணியாளர்களின் எண்ணிக்கை குறைவடைதல் நிறுவனத்தின் நடவடிக்கைகள் மீது நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தியது.

களப் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியவில்லை என்ற போதிலும் நிறுவனத்தினால் நடத்தப்படுகின்ற பாடநெறிகளை இணையவழி ஊடாக நடாத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மிகவும் குறுகிய காலத்தில் வகுக்கப்பட்டமையினால் பாடநூல்களின் மூலம் பெறப்படும் வருமானத்தை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ள முடிந்தது.

ஐந்தாம் அத்தியாயம்

நிறுவகத்தின் நிதிசார் முன்னேற்றம்

நிதிசார் பகுப்பாய்வு 2019 - 2020

	2020	2019
தொழில்சார் பாதுகாப்புப் பற்றிய பாடநெறிகளின் மூலம் ஈட்டப்பட்ட வருமானம்	8,752,050.00	24,399,651.00
சுற்றாடல் ரீதியான அளவீடுகள் மூலம் பெறப்பட்ட வருமானம்	10,123,400.00	13,797,050.00
பிற நிறுவனங்களுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள் மூலம் வழங்கப்பட்ட சேவைகளுக்காக பெறப்பட்ட வருமானம்	4,558,200.00	3,831,351.00
மருத்துவப் பரிசோதனைகள் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம்	1,140,933.00	2,220,710.00
தொழில்சார் சுகாதாரம், பாதுகாப்பு வாரத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம்	138,000.00	13,317,793.00
வட்டி வருமானம்	11,643,159.00	111,628,062.00
ஜேழுளூர் அங்கத்துவ வருமானம்	131,000.00	62,250.00
ஏனைய வருமானங்கள்	204,928.00	468,260.00
மொத்தம்	**36,691,670.00**	**69,725,171.00**

எனது இலக்கம் : எல்ஈடப்ளியூ/ஏ/என்ஐஓஎஸ்எச/01/2020/06 திகதி : 2021 செப்டெம்பர் 8

தலைவர்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மேற்படி அறிக்கை இத்துடன் அனுப்பப்பட்டுள்ளது

டப்ளியூ.பீ.சீ.விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் தலைமையதிபதி

பிரதிகள் : 01. செயலாளர் - தொழில் அமைச்சு

02. செயலாளர் - நிதி அமைச்சு

எனது இலக்கம் : எல்ஈடப்ளியூ/ஏ/என்ஐஓஎஸ்எச்/01/2020/06 திகதி : 2021 செப்டெம்பர் 8

தலைவர்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய நேரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர நிறுவகத்தின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் முழுமையாக தேய்மானம் அடைந்திருந்த கிரயம் 17,387,806 ரூபாவான சொத்துக்கள் மேற்கொண்டும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன்படி ஏற்பட்டிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட தவறினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடத்திற்காக கிடைக்கப்படவேண்டிய முதலீட்டு வட்டி வருமானம் 832,890 ரூபா குறைவாக கணக்குப் பதியப்பட்டிருந்ததனால் வருடத்தின் மிகை மற்றும் கிடைக்கப்படவேண்டிய வட்டி வருமானம் அந்தப் பெறுமதியினால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(இ) நிதிப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படும் போது 2020 ஆம் ஆண்டுக்காக திறைசேரியிடமிருந்து கிடைத்த 1,040,449 ரூபா மூலதனக் கொடைகள் நிதிச் செயற்பாடுகளின் கீழ் பண வரவுகளாக காட்டப்பட்டிருக்காமை, 11,583,055 ரூபாவான முதலீட்டு வருமானம் மற்றும் 60,104 ரூபாவான ஊழியர் கடன் வட்டி வருமானம் மற்றும் உரிய பண வரவுகள் சரியாக சீராக்கல் செய்யப்படாமை, 51,000 ரூபாவான பொருட்களுக்கான கையுதிர்வு வரவுகள் நிதிப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்படாமை மற்றும் 456,020 ரூபா கடந்த வருடத்திற்கான சீராக்கல்கள் நிதிப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்படுதல் ஆகிய விடயங்களின் காரணமாக நிதிப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) நிறுவகத்தினால் 2018 ஆம் ஆண்டு 9,700,000 ரூபாவிற்கு வேன் வண்டி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தபோதிலும் அது வருடாந்தம் தேய்மானம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், வாகனங்களுக்குரிய தேய்மான விகிதம் குறிப்புகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதோடு வாகனத்தின் கிரயம் நிறுவகத்தின் நிலையான சொத்துக்கள் பற்றிய பதிவேட்டிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நன்கொடையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட 1,650,000 ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களுக்குரியதாக வருடாந்த தேய்மானமாக 165,000 ரூபா சொத்துக்கள் பற்றிய கணக்கிலிருந்து கழிக்கப்பட்டிருந்தபோதிலும் அத் தேய்மானம் நிதி செயலாற்றுகை கூற்றில் செலவினமாக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், குறிப்பிட்ட தேய்மானப் பெறுமதிக்கு நிகரான அளவினால் கொடையானது மதிப்பிறக்கம் செய்யப்பட்டு பிற்போடப்பட்ட வருமானமாக (னுகைகநசநன சுநஎநரெந) நிதி செயலாற்றுகைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வு ஆண்டில் 3,189,463 ரூபாவிற்கு நிறுவகத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக செலுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த 54 வவுச்சர்களுக்குரிய 54 பற்றுச் சீட்டுக்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மூலதன மானியங்கள் கணக்குப் பதிவதற்கான கொள்கையொன்று நிறுவகத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு பொதுத் திறைசேரியினால் பெற்றுக்கொடுக்கப்படும் மூலதன மானியங்கள் முதலில் திறைசேரி மானியங்களாக கணக்குப் பதியப்பட்டு பின்னர் கடந்த வருடங்களில் கிடைத்த மானியங்களில் மட்டும் அடிப்படை இன்றி மூலதன மானியங்கள் மீளளிப்பாக திரண்ட நிதியத்தில் சேர்க்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. எனவே, அரசாங்கத்தின் மூலதன மானியங்களில் ஒட்டுமொத்த அளவுக்குப் பதிலாக குறிப்பிட்ட வருடத்தில் கிடைத்த மூலதன மானிய நிதி மட்டும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இதன்படி மீளாய்வு ஆண்டில் மூலதன மானியமாக 1,040,449 ரூபா மட்டும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) அமைவாக எனது காணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பானது இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களுக்கான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலதிகமாகவும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதும் பொருத்தமானதுமென்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிறுவகத்தின் 2020 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இக்கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பின்னர் எனக்கு வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற நிறுவகத்தின் 2020 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதுபற்றிய எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்களாக கருதப்படும். குறித்த ஏனைய தகவல்கள் தொடர்பில் முகாமைத்துவம் பொறுப்புக்கூற வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயத்தின் மூலம் ஏனைய தகவல்கள் அரவணைக்கப்படமாட்டாது என்பதுடன் அது தொடர்பிலான எத்தகைய உறுதிப்படுத்தலையும் அல்லது அபிப்பிராயத்தையும் நான் தெரிவிக்கவில்லை.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வுக்குரிய எனது பொறுப்பாக இருப்பது மேற்படி இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுகொள்ளக்கூடியதாக அமைகின்றபோது அவற்றை வாசிப்பதும் அவ்வாறு மேற்கொள்ளப்படும் போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறுவகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருண்மையான வகையில் இணங்கவில்லையா என்பதனை ஆராய்ந்து பார்ப்பதுமாகும்.

நிறுவகத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிகையை வாசிக்கும்போது அதில் பொருண்மையான தவறுகள் உள்ளதாக நான் தீர்மானிக்கும் பட்சத்தில் சரி செய்வதற்காக அவ்விடயங்கள் ஆளுகைத் தரப்பினர்களுக்கு தொடர்பாடல் செய்யப்படுதல் வேண்டும். மேற்கொண்டும் சரி செய்யப்படாத தவறுகள் இருக்கும் பட்சத்தில் அவை அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உரிய நேரத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்வாளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தை தொடர்ந்து பேணிச் செல்வதற்கான இயலுமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு முகாமைத்துவமானது நிறுவகத்தைக் கலைப்பதற்குக் கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையில் கணக்குப் பதிதல் மற்றும் நிறுவகத்தின் இருப்புக்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பானது அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடியவாறு நிறுவகமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களுக்கான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுப்பதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கையினை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்துவதன் காரணமாக எழக்கூடுமென்பதுடன் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தாக்கம் ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் எனது கருத்துக்கான அடிப்படைகளாகும். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான புரிதல் பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிப்பதற்கு எதிர்பார்க்கப்படவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடும் மதிப்பிடப்பட்டது.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்து செயற்படுவதற்கு பணியகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் பொருண்மையான ஐயப்பாடு உள்ளதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்

கொண்டு கணக்காய்வின் பொருட்டு நிறுவகத்திற்கான தொடர்ந்தியங்குதல் பற்றிய அடிப்படையினைப் பயன்படுத்துவதற்கான பொருத்தப்பாடுகள் தொடர்பில் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக் கூற்றுக்களில் அது பற்றிய வெளிப்படுத்தல்கள் தொடர்பாக எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாத பட்சத்தில் எனது அபிப்பிராயம் மாற்றியமைக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பணம், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீடு செய்யப்பட்டதோடு அதன்பொருட்டு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளதென்பது மதிபீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகை தரப்புகள் விழிப்பூட்டப்பட்டன.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளன.

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் கணக்காய்வுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதோடு எனது விசாரணையின் மூலம் காணப்படுகின்ற வகையில் உரிய நிதிசார் அறிக்கைகள் நிறுவகத்தினால் பேணிச் செல்லப்பட்டுள்ளன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (றை) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திசைவாகின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(ஸை) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட விதப்புரைகள் முன்வைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளன என்பது.

2.2. பின்பற்றப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள சான்றுகளின் அடிப்படையில் மற்றும் பொருண்மையான விடயங்களுக்கு வரையறுக்கப்பட்டதனுள் பின்வரும் கூற்றுக்களை முன்வைக்கும் அளவிற்கு எந்தவொரு விடயமும் எனது கவனத்திற்கு உள்ளாகவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் நிறுவகத்தின் நிர்வாக சபையின் அங்கத்தவர் ஒருவருக்கு நிறுவகம் சம்பந்தமான ஒப்பந்தம் தொடர்பாக நேரடியாகவோ வேறுவிதமாகவோ சாதாரண வர்த்தக நிலைமைக்குப் புறம்பாக தொடர்பு உள்ளதென்பது.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் பின்வரும் அவதானிப்பைத் தவிர சம்பந்தப்பட்ட ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கு அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் விநியோகிக்கப்பட்டுள்ள வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைந்தொழுகாத வகையில் செயற்பட்டுள்ளது என்பது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16: 2ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்கள், வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளுடன் தலைமை கணக்கு வழங்கும் அலுவலரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்றபோதிலும் நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றுகை அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளைத் தவிர நிறுவனத்தின் தத்துவங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றுக்கு அமைந்தொழுகாத வகையில் செயற்பட்டுள்ளனர் என்பது.

2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகச் சட்டத்தின் 3(1)(ங) உப பிரிவின் பிரகாரம் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை பற்றிய தேசிய தரநியமங்களை உருவாக்குவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றபோதிலும் 2021 ஏப்பிறல் 30 ஆம் திகதி வரை அத்தரநியமங்கள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணகாய்வுச் சட்டத்தின் 12(ஏ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் நிறுவகத்தின் வளங்கள் சிக்கனமாகவும் வினைத்திறன்மிக்க வகையிலும் பயனுள்ள வகையிலும் உரிய காலப்பகுதியில் உரிய சட்டதிட்டங்களுக்கு அமைவாக கொள்முதல் (பெறுகை) செய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லை என்பது.

ஏனைய விடயங்கள்

(அ) 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொருட் கணிப்பீட்டு அறிக்கையின் அனைத்துப் பொருட்களுக்கான பேரேட்டின் பிரகாரம் நிலுவை மட்டும் குறிப்பிடப்பட்டிருந்ததோடு உண்மையான நிலுவை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் கணக்கிடப்பட்டிருக்கவில்லை என்பதோடு வருடாந்த பொருட் கணிப்பீட்டு அறிக்கையின் திட்பநுட்பத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை.

(ஆ) நிறுவனத்தின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளை வெற்றிகரமாகப் பேணிச் செல்வதற்காக பேணிவர வேண்டிய வங்கி நிலுவையை இனங்கண்டு மிகைப் பணத்தை பயனுள்ள வகையில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை காரணமாக மீளாய்வாண்டின் ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் 4.6 மி.ரூபா முதல் 19.3 மி.ரூபா வரையான தொகை நடைமுறைக் கணக்கில் பயன்பெறாமல் காணப்பட்டது. ஆகையால் நிதியத்திற்கு ஈட்டிக்கொள்ளக்கூடியதாகவிருந்த வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(இ) 2019 ஆம் ஆண்டு நிறுவகத்தின் காகிதாதிகளுக்கான செலவினம் 427,308 ரூபாவாகும். 2020 ஆம் ஆண்டு அச்செலவினமானது 1,223,216 ரூபா என்பதோடு 2020 டிசெம்பர் 31 ஆம் திகதியில் கலஞ்சியத்தில் எஞ்சியிருந்த காகிதாதிகளின் தொகையை கணிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மீளாய்வு ஆண்டில் நிறுவகத்தின் தொழிற்பாட்டுச் செயற்பாடுகள் 2019 ஆம் ஆண்டுக்கு ஒப்பீடாக குறைவாக மேற்கொள்ளப்பட்டிருந்த பொதிலும் காகிதாதிகளுக்கான

செலவினம் 795,908 ரூபாவினால் அதாவது, நூற்றுக்கு 186 ஆல் உயர்வடைவதற்கான காரணங்கள் கணக்காய்வில் வெளியாகவில்லை.

டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எனது இலக்கம் : எல்ஈடப்ளியூ/ஏ/என்ஐஓஎஸ்எச்/எம்எல்/01/20/13(7)(ஒ)

திகதி : 2021 அக்டோபர் 29

தலைவர்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் உள்ளடங்கலாக அதன் நடவடிக்கைகள் தொடர்பில் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(7)(ஒ) பிரிவின் பிரகாரம் தலைவரிடம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விபரமான அறிக்கை

மேற்படி அறிக்கை இத்துடன் அனுப்பப்பட்டுள்ளது

02. இது தொடர்பாக கீழே ஒரு குறிப்பாக மேற்கோள் காட்டப்பட்டுள்ள நிதிச் சட்டத்தின் 13(8) ஆம் பிரிவின் மீது உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன்.

ரீ.ஜீ.ஐ.பத்மினி

உதவிக் கணக்காய்வாளர் தலைமையதிபதி

கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குப் பதிலாக

பிரதிகள் : 01. செயலாளர் - தொழில் அமைச்சு

02. செயலாளர் - நிதி அமைச்சு

நிதிச் சட்டத்தின் 13(8) ஆம் பிரிவு -

"7 ஆம் உப பிரிவின் (அ) மற்றும் (ஆ) பந்திகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கைகள் தொடர்புடைய நிறுவனத்தினால் ஆராயப்பட வேண்டும். அவ்வாறு ஆராய்ந்து பார்க்கப்பட்டதன் பின்னர் நிறுவனத்தினால் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் கணக்காய்வு அறிக்கை நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 03 மாதங்களுக்குள் தெரிவிக்கப்படுதல் வேண்டும்."

எனது இலக்கம் : எல்ஈடப்ளியூ/ஏ/என்ஐஓஎஸ்எச்/01/2020/06 திகதி : 2021 அக்டோபர் 29

தலைவர்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் உள்ளடங்கலாக அதன் நடவடிக்கைகள் தொடர்பில் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(7) (ஒ) பிரிவின் பிரகாரம் தலைவரிடம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விபரமான அறிக்கை

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் உள்ளடங்கலாக அதன் நடவடிக்கைகள் தொடர்பில் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடங்கியுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(7)(ஒ) பிரிவின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் பெறுபேறுகள் இந்த அறிக்கையின் மூலம் வெளியிடப்படுகின்றன.

1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்வாளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தை தொடர்ந்து பேணிச் செல்வதற்கான இயலுமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு முகாமைத்துவமானது நிறுவகத்தைக் கலைப்பதற்குக் கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையில் கணக்குப் பதிதல் மற்றும் நிறுவகத்தின் இருப்புக்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பானது அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடியவாறு நிறுவகமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 39 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படுவதற்கு முன்மொழியப்படுகின்ற நடவடிக்கைகள் இந்த அறிக்கையின் தினத்திலிருந்து 03 மாதங்களுக்குள் நிறுவனத்தின் ஆளுகைச் சபையினால் எனக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

1.3 விடயப் பரப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுப்பதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கையினை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்துவதன் காரணமாக எழக்கூடுமென்பதுடன் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தாக்கம் ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் எனது கருத்துக்கான அடிப்படைகளாகும். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான புரிதல் பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிப்பதற்கு எதிர்பார்க்கப்படவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடும் மதிப்பிடப்பட்டது.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்து செயற்படுவதற்கு பணியகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் பொருண்மையான ஐயப்பாடு உள்ளதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வின் பொருட்டு நிறுவகத்திற்கான தொடர்ந்தியங்குதல் பற்றிய அடிப்படையினைப் பயன்படுத்துவதற்கான பொருத்தப்பாடுகள் தொடர்பில் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக் கூற்றுக்களில் அது பற்றிய வெளிப்படுத்தல்கள் தொடர்பாக எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாத பட்சத்தில் எனது அபிப்பிராயம் மாற்றியமைக்கப்படுதல் வேண்டும். எனது அபிப்பிராயம் கணக்காய்வாளரின் அறிக்கையின் திகதி வரை பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் மீது அடிப்படையாக அமைகின்றது. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பணம், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீடு செய்யப்பட்டதோடு அதன்பொருட்டு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளதென்பது மதிபீடு செய்யப்பட்டது.

இயலுமானளவு மற்றும் தேவையேற்படும் எச்சந்தர்ப்பத்திலும் பின்வருவற்றைப் பரிசோதிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பிக்கப்படுதல் தொடர்பில் நோக்கும்போது நிறுவனத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பிடக்கூடிய வகையில் அதன் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் பயனுள்ள வகையில் பேணிச் செல்லப்படுகின்றன என்பது.

- ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கு அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் விநியோகிக்கப்பட்டுள்ள வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்பட்டுள்ளது என்பது.
- அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றுக்கு அமைவாக செயற்பட்டுள்ளது என்பது.
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுள்ள வகையிலும் உரிய காலப்பகுதிகளிலும், சட்டதிட்டங்களுக்கு அமைவாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதென்பது.

1.4 நிதிக் கூற்றுக்கள்

1.4.1 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைந்தொழுகாமை

உரிய நியமத்திற்கான தொடர்புடன் அமைந்தொழுகாமை	புதிய அவதானிப்பா / நடப்பிலுள்ள அவதானிப்பா என்பது	கட்டுப்பாட்டு ஆபத்துக்களை வெளிப்படுத்தல	முகாமைத்துவத்தின் கருத்துக்கள	விதப்புரை
(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் முழுமையாக தேய்மானம் அடைந்திருந்த கிரயம் 7,132,880 ரூபாவான சொத்துக்கள் மேற்கொண்டும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன்படி ஏற்பட்டிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட தவறினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நடப்பிலுள்ள	இருக்கின்ற முறைமையை முன்னேற்ற வேண்டும்	2020 ஆம் ஆண்டு இது தொடர்பாக இனங்காணப்பட்டுள்ள போதிலும் நிலவிய கோவிட் - 19 தொற்றுநோய் நிலைமையின் மத்தியில் அப்பணியினை மேற்கொள்ள முடியவில்லை என்பதோடு 2021 ஆம் ஆண்டு அகற்றப்பட வேண்டிய சொத்துக்களை அகற்றுவதற்கும் பயன்படுத்தக்கூடிய ஏனைய சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.	கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பயனுள்ள ஆயுட் காலத்தில் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு தேய்மானம் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பது.
(ஆ) கிரயம் 676,665 ரூபாவான மருத்துவ உபகரணங்கள் 2017 ஆம் ஆண்டு 340,000 ரூபாவுக்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், மீள் மதிப்பீடு செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்களின் கிரயம் மற்றும் திரண்ட தேய்மானம் என்பன கணக்குகளிலிருந்து அகற்றப்படாமல் கிரயம் மற்றும் மீள்மதிப்பீட்டு பெறுமதிகள் ஆகிய இரண்டும் கணக்குகளில் பேணிவரப்பட்டிருக்கவில்லை.	புதிய	இருக்கின்ற முறைமையை முன்னேற்ற வேண்டும	2017 ஆம் ஆண்டு இடம்பெற்றுள்ள கணக்குக் குறிப்புகளிலிருந்து அகற்றப்பட்டதன் குறைபாடு 2021 ஆம் ஆண்டு 676,665 ரூபா கிரயம்கொண்ட மருத்துவ உபகரணங்களுக்கான கடந்த வருடங்களுக்கான சீராக்கலாக கணக்குகளில் சரிசெய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்குப் பதிதல் வேண்டும்.

உரிய நியமத்திற்கான தொடர்புடன் அமைந்தொழுகாமை	புதிய அவதானிப்பா / நடப்பிலுள்ள அவதானிப்பா என்பது	கட்டுப்பாட்டு ஆபத்துக்களை வெளிப்படுத்தல	முகாமைத்துவத்தின் கருத்துக்கள	விதப்புரை
(இ) நிறுவனத்தினால் 2018 ஆம் ஆண்டு 9,700,000 ரூபாவிற்கு வேன் வண்டி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அது வருடாந்தம் தேய்மானம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், வாகனங்களுக்குரிய தேய்மான விகிதம் குறிப்புகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதோடு வாகனத்தின் கிரயம் நிறுவகத்தின் நிலையான சொத்துக்கள் பற்றிய பதிவேட்டிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், குறிப்பிட்ட தேய்மானப் பெறுமதிக்கு நிகரான அளவினால் கொடையானது மதிப்பிறக்கம் செய்யப்பட்டு	புதிய	இருக்கின்ற முறைமையை முன்னேற்ற வேண்டும்	அவதானிப்புடன் உடன்படுவதோடு 2020 ஆம் ஆண்டில் எக்ஸ்செல் தாள்கள் (நுஒஉநட ளாநநவ) மூலம் நிலையான சொத்துக்கள் பற்றிய பதிவேடு பேணப்பட்டு வரும்போது இடம்பெற்ற குறைபாடு எதிர்காலத்தில் மீண்டும் எற்படாதென்பதை உறுதிப்படுத்துகின்றேன். வேன் வண்டிக்கான 2020 ஆம் ஆண்டுக்குரிய தேய்மான சீராக்கலை எதிர்காலத்தில் கடந்த வருடங்களுக்கான சீராக்கலின் கீழ் குறிப்பிடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	தரத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல், தேய்மானம் செய்தல் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பது.

(ஈ)நன்கொடையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட 1,650,000 ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களுக்குரியதாக வருடாந்த தேய்மானமாக 165,000 ரூபா சொத்துக்கள் பற்றிய கணக்கிலிருந்து கழிக்கப்பட்டிருந்தபோதிலும் அத் தேய்மானம் நிதி செயலாற்றுகை கூற்றில் செலவினமாக பிற்போடப்பட்ட வருமானமாக (**Differed Revenue**) நிதி செயலாற்றுகைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், குறிப்பிட்ட தேய்மானப் பெறுமதிக்கு நிகரான அளவினால் கொடையானது மதிப்பிறக்கம் செய்யப்பட்டு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், குறிப்பிட்ட தேய்மானப் பெறுமதிக்கு நிகரான அளவினால் கொடையானது மதிப்பிறக்கம் செய்யப்பட்டு பிற்போடப்பட்ட வருமானமாக (னுகைகநசநன சுநஎநரெந) நிதி செயலாற்றுகைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	புதிய	இருக்கின்ற முறைமையை முன்னேற்ற வேண்டும்	இந்த உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் 2018 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் மீண்டும் திருத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டன. உங்களால் முன்மொழியப்பட்டுள்ள வகையில் கணக்குப் பதிவதற்கான திட்பநுட்பத்தை உறுதிப்படுத்தி இச்சொத்துக்கான தேய்மானம் தொடர்பாக கணக்குக் குறிப்புகள் வைக்கப்பட வேண்டிய விதம் தொடர்பில் தெளிவான விதப்புரையை பெற்றுத்தருமாறு கோருகின்றேன்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்குப் பதிதல் வேண்டும்.

1.4.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வின் அவதானிப்பு	புதிய அவதானிப்பா / நடப்பிலுள்ள அவதானிப்பா என்ப	கட்டுப்பாட்டு ஆபத்துக்கை வெளிப்படுத்தல	முகாமைத்துவத்தின் கருத்துக்கள்	விதப்புரை
(அ) வருடத்திற்காக கிடைக்கப்படவேண்டிய முதலீட்டு வட்டி வருமானம் 832,890 ரூபா குறைவாக கணக்குப் பதியப்பட்டிருந்ததனால் வருடத்தின் மிகை மற்றும் கிடைக்கப்பட வேண்டிய வட்டி வருமானம் அந்தப் பெறுமதியினால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.	புதிய	இருக்கின்ற முறைமையை முன்னேற்ற வேண்டும்	கணிப்பீட்டின்போது இடம்பெற்றுள்ள விடுபாடுகள் கடந்த வருடத்திற்கான சீராக்கல்களாக 2021 ஆம் ஆண்டில் சரி செய்வதற்கு கணக்காய்வாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.	இணங்கப்பட்ட வட்டி விகிதங்கள் மற்றும் சரியான காலகட்டங்கள் கருத்திற்கொண்டு வட்டி கணக்கிடப்பட வேண்டும் என்பது.
ஆ) நிதிப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதனப் பெயர்ச்சியின் கீழ் செலுத்தப்பட வேண்டிய கணக்குகளின் குறைவடைதல் 630,191 ரூபா என்றபோதிலும் 466,313 ரூபாவாக 163,878ரூபா அதிகமாக காட்டப்பட்டிருந்தது.	புதிய	இருக்கின்ற முறைமையை முன்னேற்ற வேண்டும்	நிதிப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன பெயர்ச்சி 466,313ரூபாவாக நிறுவனம் கணக்கிட்டிருப்பது 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் செலுத்தப்பட வேண்டிய பொறுப்புக்களில் பணிக்கொடை கழிக்கப்பட்டதன் பின்னர் கிடைக்கும் வித்தியாசம் சீராக்கப்படுவதன் மூலமாகும். எனவே, கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள 163,378ரூபா அதிகமாக காட்டப்பட்டிருத்தல் எனும் கணக்காய்வு அவதானிப்புடன் இணங்க முடியாதென்பதை தெரிவிக்கின்றேன்.	கணக்கீட்டு தர நியமங்களின் பிரகாரம் மற்றும் அதில் காட்டப்பட்டுள்ள துல்லியமான வழிகாட்டல்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது.

கணக்காய்வின் அவதானிப்பு	புதிய அவதானிப்பா / நடப்பிலுள்ள அவதானிப்பா என்ப	கட்டுப்பாட்டு ஆபத்துக்கை வெளிப்படுத்தல	முகாமைத்துவத்தின் கருத்துக்கள்	விதப்புரை
(இ) நிதிப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும்போது 2020 ஆம் ஆண்டுக்காக திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற 1,040,449ரூபாவிலான மூலதன மானியங்கள் நிதி செயற்பாடுகளின் கீழ் நிதி கிடைப்பனவுகளாக காட்டப்படாமை, 11,583,055 ரூபாவான முதலீட்டு வட்டி வருமானம் மற்றும் 60,104 ரூபாவான ஊழியர் கடன் வட்டி வருமானம் மற்றும் உரிய பணம் கிடைப்பனவுகள் சரியாக சீராக்கல் செய்யப்படாமை, 51,000ரூபாவான பொருட்கள் கையுதிர்வு செய்யப்படுவதன் மூலமான கிடைப்பனவுகள் நிதிப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்படாமை மற்றும் 456,020 ரூபா கடந்த வருடத்திற்கான சீராக்கல்கள் நிதிப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்படுதல் ஆகிய விடயங்களின் காரணமாக நிதிப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.	புதிய	இருக்கின்ற முறைமையை முன்னேற்ற வேண்டும	நிதிப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும்போது உரிய கவனம் செலுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. 51,000ரூபா தொகையானது கழிவுப்பொருட்கள் விற்பனை செய்யப்படுவதன் மூலம் பெறப்பட்ட வருமானம் என்பதோடு அது ஒரு முதலீடு அல்ல. 456,020 ரூபாவிலான முதலீட்டு செயற்பாடுகளின் மூலம் உருவாகிய வட்டி வருமானம் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் கடந்த வருடத்திற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய சீராக்கலாக நிதிப் பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.	கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் நிதிப் பாய்ச்சல் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்பது.

கணக்காய்வின் அவதானிப்பு	புதிய அவதானிப்பா / நடப்பிலுள்ள அவதானிப்பா என்ப	கட்டுப்பாட்டு ஆபத்துக்கை வெளிப்படுத்தல	முகாமைத்துவத்தின் கருத்துக்கள்	விதப்புரை
(ஈ) மீளாய்வாண்டில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கையகப்படுத்திக்கொள்வதற்கான செலவினம் நிதி நிலைக் கூற்றின் பிரகாரம் 175,638 ரூபா என்ற போதிலும் நிலையான சொத்துக்கள் பற்றிய ஆவணத்தின் பிரகாரம் 159,329ரூபாவாக அமைந்தது. அதற்கமைவாக நிலுவைகளுக்கு மத்தியில் 16,309 ரூபாவிலான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.	புதிய	இருக்கின்ற முறைமையை முன்னேற்ற வேண்டும	மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்கள் பற்றிய பதிவேடு மற்றும் கணக்குகள் என்பவற்றுக்கிடையிலான வித்தியாசம் இனங்காணப்பட்டு கணக்குகள் சரி செய்யப்படுவதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.	சரியான புள்ளி விவரங்களை உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களை சரியாகத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(உ)நிறுவனத்தினால் மூலதன மானியங்கள் கணக்குப் பதிவதற்கான கொள்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு பொதுத் திறைசேரியினால் பெற்றுக்கொடுக்கப்படும் மூலதன மானியங்கள் முதலில் திறைசேரி மானியங்களாக கணக்குப் பதியப்பட்டு பின்னர் கடந்த வருடங்களில் கிடைத்த மானியங்களில் மட்டும் அடிப்படை இன்றி மூலதன மானியங்கள் மீளளிப்பாக திரண்ட நிதியத்தில் சேர்க்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. எனவே, அரசாங்கத்தின் மூலதன மானியங்களில் ஒட்டுமொத்த அளவுக்குப் பதிலாக குறிப்பிட்ட வருடத்தில் கிடைத்த மூலதன மானியம் நிதி மட்டும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இதன்படி மீளாய்வு ஆண்டில் மூலதன மானியமாக 1,040,449 ரூபா மட்டும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.		இருக்கின்ற முறைமையை முன்னேற்ற வேண்டும்	நிறுவனத்தின் சகல கணக்கீட்டு நடவடிக்கைகளும் ஞரஉஉம டீழழம கணனி மென்பொருள் ஊடாக முன்வைக்கப்படும் நிதி அறிக்கைகளில் தனியான குறிப்புகளின் கீழ் சமர்ப்பிக்கப்படுகின்ற போதிலும் குறிப்பிட்ட மூலதன கிடைப்பனவுகள் கணக்கீட்டு முறைமையின் மூலம் திரட்டிய நிதியத்தில் சுயமாக ஒன்று சேர்வதோடு அது கணக்குக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும் போது குறிப்பிட்ட சீராக்கல்கள் மீண்டும் எதிர்வரும் வருடத்தில் குறிப்பு இலக்கம் 4 இன் கீழ் திரட்டிய மிகை உருவாகிய விதத்தை விபரமாக முன்வைக்கும். மேற்கொள்ளப்படுவதோடு 2019 ஆம் ஆண்டில் மூலதனச் செலவினம்(நுஒஉநட ளுாநநவ) பத்திரத்தில்	மூலதன மானியங்கள் கணக்குப் பதியப்படும் கணக்கீட்டுக் கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும் மற்றும் அதன் பிரகாரம் கணக்குகள் பதியப்பட வேண்டும் என்பது.

1.4.3 கணக்காய்வுக்காக எழுத்து மூலமான சான்றுகள் இன்மை

விடயம	தொகை (ரூபா)	வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள்	புதிய அவதானிப்பா /நடப்பிலுள்ள அவதானிப்பா என்பது	கட்டுப்பாட்டு ஆபத்துக்களை வெளிப்படுத்தல	முகாமைத்துவத்தின் கருத்துக்கள்	விதப்புரை
(அ) கொள்வனவுகளும் சேவைகளும்	3,189,463	நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளுக்குரிய 54 பட்டியல்கள் கணக்காய்வு க்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்பதோடு உரிய விலைப் பட்டியல்கள் மட்டும் வவுச்சருடன் இணைக்கப்பட்டிருந்தன.	புதிய	இருக்கின்ற முறைமையை முன்னேற்ற வேண்டும	கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் விலைப் பட்டியல்கள் மீது அமைந்து வவுச்சர்கள் மூலம் உரிய செலுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் வவுச்சர்களின் பின்புறத்தில் உரிய பணத்தொகை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்பம் இடப்பட்டுள்ளது. அத்தோடு கணக்காய்வின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வவுச்சர்களில் அதிகமானவை நிறுவனத்தின் வாகனங்களுக்கான சர்விஸ் கட்டணங்களுக்குரியவை என்பதோடு போக்குவரத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் மேற்படி சேவைகள் பெற்றுக் கொள்ளப்பட்டதாக உறுதிப்படுத்தியுள்ளார். ஆயினும், எதிர்காலத்தில் செலுத்தல்கள் மேற்கொள்ளப்படும் போது குறிப்பிட்ட பணத் தொகை கிடைக்கப்பட்டமைக்கு அச் சேவைகளை பெற்றுக்கொண்ட வழங்குநர் களிடமிருந்து உறுதிப்படுத்தல் கடிதங்கள் அல்லது பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.	ஐவ ளை வமைந வழ கழசபநவ வாந யௌளவ யனெ டிநபகை ய நெற ளவயசவ. ர்யீல நேற லுநயச! 2022

1.5 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுக்கு அமைந்தொழுகாமை

சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகளுக்கான தொடர்பு	அமைந்தொழுகாமை	புதிய அவதானிப்பா/ நடப்பிலுள்ள அவதானிப்பா என்பது	கட்டுப்பாட்டு ஆபத்துக்களை வெளிப்படுத்தல	முகாமைத்துவத்தின் கருத்துக்கள	விதப்புரை
(அ) 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகச் சட்டம்					
(ஈ) 3 (1)(ங) உப பிரிவு	தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை தொடர்பான தேசிய தர நியமங்களை உருவாக்குவதற்கு நிறுவனம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்ற போதிலும் 2021 ஏப்பிறல் 30 ஆம் திகதி வரை அத்தர நியமங்கள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை நியமங்கள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை.	புதிய	இருக்கின்ற முறைமையை முன்னேற்ற வேண்டும்	கைத்தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்திற்கு மேலதிகமாக தொழல்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலனோம்பல் சட்டமாக புதியதொரு சட்டத்தைக் கொண்டு வருவதற்காக நடவடிக்கைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. அப்புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் உரிய தர நியமங்கள் ஏற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது.
(ஆ)2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16:2 ஆம் பிரிவு	வருடாந்த நிதிக் கூற்றுக்கள், வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளுடன் பிரதம கணக்கு வழங்கும் அலுவலரால் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்ற போதிலும் நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றுகை அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	புதிய	இருக்கின்ற முறைமையை முன்னேற்ற வேண்டும்	16.2 ஆம் பிரிவின் பிரகாரம் தனியாக நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றுகை அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். செயலாற்றுகை அறிக்கைகளை எதிர்வரும் வருடங்களில் கணக்குக் கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றுகை அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.6 நிதி முகாமைத்துவம்

கணக்காய்வின் அவதானிப்பு	புதிய அவதானிப்பா /நடப்பிலுள்ள அவதானிப்பா என்பது	கட்டுப்பாட்டு ஆபத்துக்கை வெளிப்படுத்தல்	முகாமைத்துவத்தின் கருத்துக்கள	விதப்புரை
அ)நிறுவனத்தின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளை வெற்றிகரமாகப் பேணிச் செல்வதற்காக	புதிய	புதிய முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும்	5.9 மி.ரூபா ஒதுக்கமாக வைத்துக்கொள்ள நேர்ந்தமைக்கான காரணம் 2020 ஆம் ஆண்டு மருத்துவ உபகரணங்கள் மற்றும் கணினி (டுயிவழி) உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டமையாகும். தற்போது கணினிகள் (டுயிவழி) கொள்வனவு செய்யப்பட்டுள்ள போதிலும் இடைக்கிடை கோவிட் - 19 தொற்று நோயின் காரணமாக குறிப்பிட்ட உபகரணங்களின் இறக்குமதி தாமதமடைந்ததன் விளைவாக முதலீடுகளின் பணம் வைப்புச் செய்வதற்கான இயலுமை இருக்கவில்லை என்பதோடு இந்த கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ஈட்டிக்கொள்ளக்கூடியதாகவிருந்த வட்டி வருமானம் இழக்கப்படவில்லை என்பதால் இணங்க முடியாதென தெரிவிக்கின்றேன். எவ்வாறாயினும், நிறுவனத்திலுள்ள நிதி நிலுவை பற்றிய சரியான மதிப்பீட்டின் பின்னர் நிதி முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை அறியத்தருகின்றேன்.	வங்கி நிலுவையை இனங்கண்டு மிகை பணத்தை குறுகியகால சேமிப்பு முறையொன்றில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2. நிதிசார் மீளாய்வு

2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் தொழிற்பாட்டுப் பெறுபேறு ரூ.11,057,350 மிகையாக அமைந்ததோடு அதற்கு நேரொத்த கடந்த ஆண்டுக்கான மிகை ரூ.28,130,642 ஆக அமைந்திருந்தது. அதன் பிரகாரம் நிதிசார் பெறுபேறில் ரூ.17,073,292விலான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு கோவிட் - 19 தொற்றுநோய் பிரதான காரணமாக அமைந்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்றிறன் இன்மைகள்

கணக்காய்வின் அவதானிப்பு	புதிய அவதானிப்பா /நடப்பிலுள்ள அவதானிப்பா என்பது	கட்டுப்பாட்டு ஆபத்துக்கை வெளிப்படுத்தல்	முகாமைத்துவத்தின் கருத்துக்கள	விதப்புரை
(அ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01.்.2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை 11.1 பந்தி எதிர்வரும் நிதி ஆண்டின் சனவரி 31 ஆம் திகதியில் கடந்த ஆண்டுக்கான பொருட் கணிப்பீட்டு நடவடிக்கைகள் பௌதீக ரீதியில் முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வு ஆண்டுக்கான பொருட் ் கணிப்பீட்டு நடவடிக்கைகள் 2021 ஏப்பிறல் 30 ஆம் திகதி வரை முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.	புதிய	புதிய முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும்	நிறுவனத்தினால் பொருட் கணிப்பீட்டு நடவடிக்கைகள் 2021 பெப்ருவரி 26 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டதோடு கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் அது மேற்கொள்ள முடியாமற் சென்றமைக்கான காரணம் நாட்டில் நிலவிய கோவிட் - 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் பயனத்தடைகள் விதிக்கப்பட்ட பகுதிகளில் குடியுள்ளமையினால் சேவைக்கு அவர்களை அழைத்துக்கொள்ள முடியாமல் சென்றதாகும். ஆயினும், தற்போது கோவிட் - 19 தொற்று நோயின் நிலைமையில் கூட பொருட் கணிப்பீட்டு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.	அரச நிதிச் சுற்றறிக்கை 01.்.2020 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது.

(ஆ) 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொருட் கணிப்பீட்டு அறிக்கையின் அனைத்துப் பொருட்களுக்கான பேரேட்டின் பிரகாரம் நிலுவை மட்டும் குறிப்பிடப்பட்டிருந்ததோடு உண்மையான நிலுவை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் கணக்கிடப்பட்டிருக்கவில்லை என்பதோடு வருடாந்த பொருட் கணிப்பீட்டு அறிக்கையின் திட்பநுட்பத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை.	புதிய	இருக்கின்ற முறைமையை முன்னேற்ற வேண்டும்	2019 ஆம் ஆண்டுக்கான பொருட் கணிப்பீடு தொடர்பில் உண்மையான நிலுவை குறிப்பிடப்படாமை தொடர்பாக இணங்குவதோடு குழு அங்கத்தவர்களால் குறித்த ஒப்பங்களுக்கு முன்னர் (தேவையான பக்கத்தில்) மிகை அல்லது பற்றாக்குறை இல்லையென குறிப்பிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கின்றேன். எதிர்காலத்தில் உரிய அறிக்கைகளை நிறுவனத்திற்கு அனுப்புவதற்கு முன்னர் மீண்டும் பரிசோதிக்குமாறு பொருட் கணிப்பீட்டுக் குழுக்களுக்கும் உரிய பொறுப்புவாய்ந்த சகல உத்தியோகத்தர்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.	நி.பி.757இன் பிரகாரம் 66 ஆம் மாதிரியின் பிரகாரம் மீளாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

3.2 செயற்பாட்டு செயற்றிறன் இன்மைகள

கணக்காய்வின் அவதானிப்பு	புதிய அவதானிப்பா /நடப்பிலுள்ள அவதானிப்பா என்பது	கட்டுப்பாட்டு ஆபத்துக்கை வெளிப்படுத்தல்	முகாமைத்துவத்தின் கருத்துக்கள	விதப்புரை
(அ) 2019 ஆம் ஆண்டு நிறுவனத்தின் காகிதாதிகளுக்கான செலவினம் 427,308 ரூபாவாகும். 2020 ஆம் ஆண்டு அச்செலவினமானது 1,223,216 ரூபா என்பதோடு 2020 டிசெம்பர் 31 ஆம் திகதியில் கலஞ்சியத்தில் எஞ்சியிருந்த காகிதாதிகளின் தொகையை கணிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மீளாய்வு ஆண்டில் நிறுவனத்தின் தொழிற்பாட்டுச் செயற்பாடுகள் 2019 ஆம் ஆண்டுக்கு ஒப்பீடாக குறைவாக மேற்கொள்ளப்பட்டிருந்த பொதிலும் காகிதாதிகளுக்கான செலவினம் 795,908 ரூபாவினால் அதாவது, நூற்றுக்கு 186 ஆல் உயர்வடைவதற்கான காரணங்கள் கணக்காய்வில் வெளியாகவில்லை.	புதிய	புதிய முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும்	2019 ஆம் ஆண்டில் ஆரம்பத் தொகையாக காணப்பட்ட 644,856 ரூபா பெறுமதியான காகிதாதி இருப்புகள் 2020 ஆம் ஆண்டுக்காக பெற்றுக்கொள்ளப்பட்டதோடு 2020 ஆம் ஆண்டுக்கான காகிதாதிகளின் செலவினம் 578,359 ரூபாவாக அமைந்தது.2020ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட காகிதாதிகள் 2021 ஆம் ஆண்டில் இன்றளவிலும் பயன்படுத்தப்படுவதோடு 2021 ஆம் ஆண்டுக்காக இதுவரை ஏற்கப்பட்டுள்ள செலவினம் 68,694 ரூபாவாகும். அட்டவணைகளை உரிய முறையில் பேணிச் செல்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.	வருடத்திற்கான வருமானம் சரியாக காட்டப்படும் வகையில் வருடத்திற்கான செலவினம் மற்றும் எஞ்சியுள்ள இருப்பை கணக்கிடக்கூடியதாக காகிதாதி இருப்புகளுக்கான பதிவேடுகள் பேணப்பட வேண்டுமென்பதோடு எஞ்சிய இருப்பு காணப்படின் அது நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுதல் வேண்டும்.

4. கணக்களிப்புப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்

கணக்காய்வின் அவதானிப்பு	புதிய அவதானிப்பா / நடப்பிலுள்ள அவதானிப்பா என்பது	கட்டுப்பாட்டு ஆபத்துக்களை வெளிப்படுத்தல	முகாமைத்துவத்தின் கருத்துக்கள	விதப்புரை
(அ) 2019 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை 2021 யூன் 15 ஆம் திகதி வரை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	புதிய	இருக்கின்ற முறைமையை முன்னேற்ற வேண்டும்	திட்பநுட்பத்தைப் பரிசோதிப்பதற்காக 2019 ஆண்டறிக்கை வெளியீட்டுக் குழுவிற்கு வழங்கப்பட்டதன் பின்னர் 2021 ஏப்பிறல் 10 ஆம் திகதி அது மீண்டும் நிறுவனத்திற்குக் கிடைத்துள்ளதோடு உரிய சரி செய்தல்கள் மேற்கொள்ளப்பட்டு அச்சிடல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2021 யூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது.

ரீ. ஜீ. ஐ. பத்மினி

உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பதிலாக

Notes:

Notes: